ISSN: 2582–5518




புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM | VARALARUU | PUDUGAIVARALARU | YouTube VARALARUU | 7502051351




திங்கள் ❖ நவம்பர். 06, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 34 ❖ ரூ.10



# இன்று

6-11-2023

சக வருடம் 1945 கார்த்திக 15

மாதுளம் பழம் மலச்சிக்கலை குணப்படுத்தும்

| சோபகிருது ஐப்பசி 20 | NOV - MON திங்கள் | ரபிஉல்ஆகிர் 21 தேய்பிறை 310 / 055 | இராசிபலன் |
|---|---|---|---|

தேய். நவமி 60.00 (முழுவதும்) ஆயில்யம் 23.41 (மா. 03.35) தியாஜ் 56.58 அகஸ் 29.07 சித்த 23.41 மேல் மரண. கரிநாள். திரிதினஸ்பிரிக். நெல்லை காந்திமதியம்மன் ரதோற்சவம். தூத்துக்குடி, கோவில்பட்டி, பத்தமடை, தென்காசி, இத்தலங்களில் அம்பாள் சிறப்பு அலங்கார உலா. சிறிய நகக.

| நல்லநேரம் | கௌரி.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|
| காலை: 6.15-7.15 | 9.15-10.15 | 07.30 | 01.30 | 10.30 |
| மாலை: 4.45-5.45 | 7.30-8.30 | 09.00 | 03.00 | 12.00 |

சூலம் : கிழக்கு; பரிகாரம் : தயிர்; துலா லக்கனம் இருப்பு நா. 1 வி. 50; சந்திராஷ்டமம் பூராடம் உத்திராடம்

கரணம் : 9-10.30; சூரிய உதயம் : 6.07

முப்பது வருடர் தாழ்த்தவுறும் இல்லை

இராசிபலன்: மேஷம் - சாந்தம்; ரிஷபம் - புகழ்; மிதுனம் - சுகம்; கடகம் - நலம்; சிம்மம் - பயம்; கன்னி - சிந்தனை; துலாம் - நிறைவு; விருச்சி - அமைதி; தனுசு - வருத்தம்; மகரம் - நன்மை; கும்பம் - தனம்; மீனம் - மகிழ்ச்சி

## சிந்திப்போம்.... செயல்படுவோம்

"விதி என்பது உங்களுக்கு நீங்களே உருவாக்கிக்கொள்வது. உங்கள் விதியை நீங்களே உருவாக்கத் தவறும்போது அது தலைவிதியாகிறது."




# சிவில் நீதிபதி தேர்வு குளறுபடி டிஎன்பிஎஸ்சி தரப்பில் விளக்கம்

சென்னை, நவ. 6–

நேற்று நடைபெற்ற சிவில் நீதிபதி தேர்வில் நேரிட்டதாக சொல்லப்படும், குளறுபடியின் பின்னணி குறித்து டிஎன்பிஎஸ்சி நிர்வாகம் விளக்கம் அளித்துள்ளது.



தமிழகம் நெடுக நேற்று சிவில் நீதிபதிக்கான தேர்வு நடைபெற்றது. இதில் வடசென்னையின்தேர்வுமையம் ஒன்றில் பெருத்த குழப்பம் விளைந்தது. அந்த மையத்தில் மதியம் நடைபெறவிருந்த தேர்வுக்கான வினாத்தாள் காலை அமர்வில் விநியோகம் செய்யப்பட்டது. இதனால் தேர்வு எழுத அமர்ந்திருந்தோர் குழப்பத்துக்கு ஆளானார்கள். மேலும் மதியம் தேர்வெழுத காத்திருந்தோரும் அதிர்ச்சி அடைந்தனர்.

இதனையொட்டி, சிவில் நீதிபதி தேர்வுகளை செயல்படுத்தியடிஎன்பிஎஸ்சிக்கு எதிராக குற்றச்சாட்டுகள் எழுந்தன. உடனே அது குறித்து டிஎன்பிஎஸ் சார்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. அதில், "சிவில் நீதிபதிக்கான தேர்வை நடத்துவது சென்னை உயர் நீதிமன்றம். அவர்கள் தயார் செய்து வழங்கிய வினாத்தாள்களையே நாங்கள் வழங்கினோம். இதில் டிஎன்பிஎஸ்சி தரப்பில் தவறோ, குழப்பமோ இல்லை' என விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

## கருணாநிதி நூற்றாண்டு விழா

# 30 மாவட்டங்களில் பயணிக்கும் முத்தமிழ் தேர் கன்னியாகுமரியில் 4 அமைச்சர்கள் தொடங்கிவைத்தனர்

நாகர்கோவில் : நவ. 6,

முன்னாள் முதல்வர் கருணாநிதியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, தமிழகம் முழுவதும் பயணம் மேற்கொள்ள இருக்கும் முத்தமிழ் தேர் அலங்கார ஊர்தி கன்னியாகுமரியில் புறப்பட்டது.



கன்னியாகுமரி காந்தி மண்டபம் அருகில் இந்தப் பயணத்தை, அமைச்சர்கள் பெரியகருப்பன், அன்பில் மகேஸ், மனோ தங்கராஜ், கயல்விழி செல்வராஜ் ஆகியோர் முரசு கொட்டித் தொடங்கிவைத்தனர்.

இதில் அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் பேசும்போது, "எழுத்தை மூச்சாகக் கொண்ட கருணாநிதி பயன்படுத்திய பேனாவடிவில் ஊர்தி அமைக்கப்பட்டுள்ளது. அவரது புகைப்படங்கள் ஊர்தியின் வெளியே இடம்பெற்றுள்ளன. அவரது சிறப்புகளை விளக்கும் குறும்படத்தை திரையிடும் வகையில் ஒளித்திரையும் அமைக்கப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதும் இந்த ஊர்தி சுற்றுப்பயணம் மேற்கொள்ளும்.

வாகனத்தின் உள்ளே முன்னாள்முதல்வர்கருணாநிதி வசித்தகோபாலபுரம் இல்ல உள்வடிவமும்,அதில்அஞ்சுகம் அம்மாள் சிலையும், அருகில் கருணாநிதி அமர்ந்திருப்பது போன்ற சிலையும், அவர் பயன்படுத்திய நூலகத்தின் மாதிரி வடிவமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளன. மாநிலம் முழுவதும் 30 மாவட்டங்களுக்கு பயணம் மேற்கொள்ளும் இந்த அலங்கார ஊர்தி, வரும் டிசம்பர் 4-ம் தேதி சென்னைக்கு வரும்" என்றார். இந்த நிகழ்ச்சியில், குமரி மாவட்ட ஆட்சியர் ஸ்ரீதர், விஜய் வசந்த் எம்.பி., சமூக நலத்துறை ஆணையர் அமுதவல்லி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# கறம்பக்குடி அருகே மழையூர் காவல்நிலையம் திறப்பு எப்போது பொதுமக்கள் எதிர்பார்ப்பு

கறம்பக்குடி, நவ. 06–

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி தாலுகா மழையூரில் காவல்நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்த காவல்நிலையம் ஆங்கிலேயர் காலத்தில் தொடங்கப்பட்டு நூற்றாண்டை கடந்து செயல்படும் சிறப்பினை பெற்றது. புறக்காவல் நிலையமாக செயல்பட்டு வந்த மழையூர் காவல்நிலையம் உதவி ஆய்வாளரை கொண்டு காவல் நிலையமாக மாற்றப்பட்டது. சிறிய கட்டிடத்தில் இயங்கி வந்ததால் காவல் நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கப்பட்டது. காவல் நிலையம் அருகே காவலர் குடியிருப்புகளும் நிதி ஒதுக்கப்பட்டு கட்டிட பணிகளும் நடைபெற்று வருகிறது.



தற்காலிகமாக காவல்நிலையம் ஊராட்சி சேவை மைய கட்டிடத்தில் இயங்கி வருகிறது.காவல் நிலைய புதிய கட்டிடம் கட்டப்பட்டு கட்டுமான பணிகள் நிறைவு பெற்று பல மாதங்கள் கடந்துவிட்டது, ஆனால் புதிய கட்டிடம் திறக்கப்படாமல் உள்ளது, இதனால் தற்காலிக கட்டிடத்தில் இயங்கிவரும் இடத்தில் புகார் அளிப்பவர்களும், பாஸ்போர்ட் உள்ளிட்ட சேவைகளுக்கும் பொதுமக்கள் சிரமத்துடன் செல்கின்றனர், கட்டுமான பணிகள் நிறைவு பெற்று பல மாதமாக திறக்கப்படாமல் இருக்கும் காவல் நிலையத்தை செயல்பாட்டுக்கு கொண்டு வர பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.






தென்காசி மாவட்டம் சிவகிரி பேரூர் கழக பகுதியில் 24– வாக்குச்சாவடிகளில் புதிய வாக்காளர்களை சேர்த்தல், நீக்குதல், ரெட்டை வாக்குப்பதிவு கண்டறிதல் போன்ற நிகழ்வுகளை பூத் முகவர்களுடன் சேர்ந்து ஆய்வு செய்யப்பட்டது, இந்நிகழ்ச்சியில் தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயலாளர் ராஜா எம்எல்ஏ, தலைமை செயற்குழு உறுப்பினர் யு.எஸ்.டி.சீனிவாசன், மாநில மருத்துவர் அணி துணை அமைப்பாளர் மருத்துவர்சு.சே. செண்பக விநாயகம், புளியங்குடி நகரச் செயலாளர்எ. அந்தோணி சாமி ஆகியோர் கலந்து கொண்டு ஆய்வு செய்தனர் .இந்நிகழ்ச்சியை முடித்துவிட்டு ஊருக்கு திரும்பும் வழியில் சிவகிரிஅரசு மருத்துவமனை அருகே இருசக்கர வாகனத்தில் சென்ற வாலிபரும் ஒரு பெண்ணும் விபத்து ஏற்பட்டு சுயநினைவு இல்லாமல் ரோட்டின் அருகே கிடந்தனர் இதைக் கண்ட எம்எல்ஏ ராஜா, யூ.எஸ். டி.சீனிவாசன்,சு.சே. செண்பக விநாயகம் முதலுதவி செய்து அரசு மருத்துவமனைக்கு இருவரையும் அனுப்பி வைத்தனர் மேலும் இருவரும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# புதுக்கோட்டை அரசு மருத்துவ கல்லூரி மாணவர்கள் சுகாதார தத்தெடுப்பு களப்பயணம்

புதுக்கோட்டை , நவ. 06–

புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி முதலாமாண்டு மருத்துவ மாணவர்கள் சார்பில் சுகாதாரத்தத்தெடுப்பு களப்பயணம்.



புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரியின் முதலாமாண்டு எம்.பி.பி.எஸ் பயிலும் 25 மருத்துவமாணவர்கள் சமூக மருத்துவம் மற்றும் நோய் தடுப்புதுறை மருத்துவர் கே.சரவணன் தலைமையில் சுகாதார தத்தெடிப்பிற்காக வாராப்பூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்குட்பட்ட வடவாளம் கிராமத்திற்கு களப்பயணம் மேற்கொண்டனர். அங்கு சென்ற மருத்துவ மாணவர்கள் சுகாதாரம் சார்ந்த தகவல்களை சேகரித்து ஒவ்வொரு மாணவரும் சுகாதாரத்தத்தெடுப்பிற்காக தலா ஐந்து குடும்பங்கள் வீதம் தத்தெடுத்து குடும்பத்தில் உள்ளவரின் தொலைபேசி எண்ணை மாணவர்கள் பெற்றுக்கொண்டர்.

சுகாதார குடும்பதத்தெடுப்பு என்பது மருத்துவக்கல்வி திட்டத்தில் முதலாமாண்டு எம்.பி.பி.எஸ் பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவரும் 5 குடும்பங்களை தத்தெடுத்து தத்தெடுத்த குடும்பத்திற்கு தேவையான மருத்துவ மற்றும் நோய் சம்பந்தப்பட்ட நோயை தடுக்கக்கூடிய வழிகாட்டுதல்களுக்கு உதவியாக இருந்து ஆலோசனைகள் தேவைப்படும் நேரங்களில் வழங்கி கண்காணித்து வரவேண்டும். அந்த ஐந்து குடும்பத்தைச் சேர்ந்த குடும்ப உறுப்பினர்களும் ரத்த அழுத்தம் சர்க்கரை நோய் உள்ளிட்ட பல்வேறு வகையான நோய்களுக்கும் கர்ப்பிணி பெண்கள் குழந்தைகளுக்கு தேவையான ஆலோசனைகளையும் அந்த மாணவரிடம் தொலைபேசியில் தொடர்புகொண்டும் மருந்துகள் எடுத்துக் கொள்வது பற்றியும் அவசரகால நேரங்களிலும் முதலுதவி அளிப்பது பற்றியும் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு வரும்போது தேவையான மருத்துவ ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளலாம் என்று குடும்பத்தாரிடம் கூறி களப்பயணம் முடித்தனர். களப்பணிக்கான ஒருங்கிணைப்பு பணிகளை சுகாதார ஆய்வாளர் கோபாலன் மற்றும் ஊர்ட்சிமன்றத்தலைவர் செய்திருந்தனர். இந்த நிகழ்வில் செவிலியர்கள் சுகாதார பணியாளர்கள் உடனிருந்தனர்.



மதுரை வடக்கு மாசி வீதி தனியார் திருமண மண்டபத்தில் தமிழ்நாடு சைவ வேளாளர் சங்கம், மதுரை மாவட்டம் சைவ வேளாளர் நல அறக்கட்டளை இணைந்து நடத்தும். ஐம்பெரும் விழாவில் மூத்த நிர்வாகிகளின் சேவையை பாராட்டி வ.உ.சி. விருதை வணிகர் அணி அமைப்பாளர், தமிழ்நாடு சைவ வேளாளர் சங்கம் சக்தி வடிவேலுக்கு ஆதீனம் 46வது குருமகா சன்னிதானம் குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் வழங்கினார். உடன் தலைவர் சங்கர குமார் பிள்ளை, செயலாளர் சேதுப்பிள்ளை, பொருளாளர் சந்தானம் பிள்ளை, சைவ நல அறக்கட்டளை இராமலிங்கம் பிள்ளை மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# ஏர் இந்தியா விமானத்தை தகர்க்கப் போவதாக சீக்கிய பிரிவினைவாதி குர்பத்வந்த் மிரட்டல்

புதுடெல்லி, நவ. 06–

ஏர் இந்தியா விமானத்துக்குப் பகிரங்கமாக மிரட்டல் விடுத்து காலிஸ்தான் பயங்கரவாதி குர்பத்வந்த் சிங் பன்னுன் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த வீடியோவில் வரும் நவ.19-ம் தேதிக்கு பிறகு சீக்கியர்கள் யாரும் ஏர் இந்தியா விமானத்தில் பயணிக்க வேண்டாம் என்று அவர் தெரிவித்துள்ளார். விமானத்துக்கு பகிரங்கமாக அவர் விடுத்துள்ள மிரட்டல் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



பயங்கரவாதியாக அறிவிக்கப்பட்டுள்ள, சீக்கியர்களுக்கான நீதி என்ற (எஸ்எஃப்ஜெ) அமைப்பின் நிறுவனர் தான் இந்த குர்பத்வந்த் பன்னூன். இந்தியாவில் காலிஸ்தான் தனி நாடு கோரும் அனைத்து அமைப்புகளும் தடை செய்யப்பட்டுள்ளன. அதேபோல் தான் குர்பத்வந்தின் எஸ்எஃப்ஜெ அமைப்பும் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், சமூக ஊடகங்களில் பரவும் வீடியோ ஒன்றில் குர்பத்வந்த், "நவ.19-க்கு பின்னர் சீக்கியர்கள் யாரும் ஏர் இந்தியா விமானத்தில் பறக்க வேண்டாம். உங்கள் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படலாம்.நவம்பர் 19 ஆம் தேதி உலக பயங்கரவாத கோப்பையின் (உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியை இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்) இறுதிப்போட்டி நடைபெற இருக்கிறது. அதன் பின்னர் பெரிய மாற்றங்கள் நிகழவுள்ளன.

டெல்லியில் உள்ள இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தின் பெயர் மாற்றப்படும். பஞ்சாப் விடுதலை அடைந்ததும் அந்த விமான நிலையத்தின் (இந்திராகாந்தி சர்வதேச விமானநிலையம்) பெயர் ஷாகித்பேனட்சிங்,ஷாகித் ஷத்வந்த்சிங் காலிஸ்தான் விமான நிலையம் என்று மாற்றப்படும் " என்று கூறியுள்ளார்.

குர்பத்வந்த் இவ்வாறு மிரட்டல் விடுவது இது முதல் முறை இல்லை. கடந்த செப்டம்பரில் சீக்கிய பிரிவினைவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கனடாவில் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, இந்தியாவுக்கும் கனடாவுக்கும் இடையில் ராஜாங்க ரீதியான பின்னடைவு ஏற்பட்டபோது கனடாவாழ் இந்துக்கள் அங்கிருந்து வெளியேற வேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் குர்பத்வந்தின் புதிய வெறுப்பு பேச்சு வீடியோ சமூக வலைதளங்களில் பரவுவதைத் தொடர்ந்து, அவர்கனடாஎல்லைக்குள் நுழைவதைத் தடை செய்யவேண்டும் என்று கனடாவில் உள்ள இந்து அமைப்பினைச் சேர்ந்த வழக்கறிஞர்கள், கனடா குடிமைப்பதிவு அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கனடாஅமைச்சர்மார்க் மில்லருக்குவழக்கறிஞர்கள் எழுதியிருக்கும் கடிதத்தில், "குர்பத்வந்தின் பேச்சு இந்துச் சமூகத்தினரிடம் மட்டும்இல்லாமல்கனடா நாட்டு மக்களிடமும் துயரத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது" என்று தெரிவித்துள்ளனர்.

# சென்னையில் தண்ணீர் தேங்கும் தாழ்வான பகுதிகளின் எண்ணிக்கை 37–ஆக குறைந்துள்ளது : மாநகராட்சி ஆணையர் பேட்டி

சென்னை, நவ. 6–

சென்னையில் ஒரு காலத்தில், 800 தண்ணீர் தேங்கும் தாழ்வான பகுதிகள் இருந்தன. தற்போது அவை படிப்படியாகக் குறைந்து 37 இடங்களில் மட்டுமே தண்ணீர் தேங்குகிறது என்று சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.



சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், பெருநகர சென்னை மாநகராட்சி, ராயபுரம் மண்டலத்துக்குட்பட்ட பிரகாசம் சாலையில் ரூ.5.55 கோடி மதிப்பீட்டில் 1.11 கி.மீ. நீளத்தில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால்வாயினை சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணன், நேற்று ஆய்வு செய்தார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அவர்,"தமிழகமுதல்வர், சென்னையின் மழை நிலவரம் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைப் பணிகள் குறித்து தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகிறார். அதிகாரிகள் தரப்பில் இருந்து கொடுக்கப்படும் தகவல்கள் மட்டுமின்றி, பத்திரிகை மற்றும் ஊடகங்களில் சுட்டிக்காட்டப்படும் செய்திகள் குறித்தும் விசாரித்து வருகிறார்.

தற்போது வரை தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இனி நாம் எதிர்பாராத அளவு மழையும் வரலாம். அதுபோன்ற சூழலை சமாளிக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அந்த நேரத்தில் தேவைப்படும் பம்புசெட் உள்ளிட்ட உபகரணங்கள் தயார் நிலையில் உள்ளன.

சென்னையில் ஒரு காலத்தில், 800 தண்ணீர் தேங்கும் தாழ்வான பகுதிகள் இருந்தன. தற்போது அது படிப்படியாக குறைந்து 37 இடங்கள் மட்டுமே உள்ளன. மழை வெள்ள பாதிப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் தொழில்நுட்ப ரீதியாகவும் தயார் நிலையில் உள்ளோம். பொது சுகாதாரத்துறை சார்ந்த அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

டெங்கு காய்ச்சல் மட்டுமின்றி, ப்ஃளு காய்ச்சல், சுவாசப் பிரச்சினைகள், வயிற்றுப்போக்கு மற்றும் தோல் சம்பந்தமான நோய்கள் பரவாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எங்காவது நோய்ப் பரவல் அதிகமாக இருந்தால், சிறப்பு முகாம்கள் சென்னை மாநகராட்சி சார்பில் நடத்த ஏற்பாடு செய்யப்படும். தேவையான மருந்துகள் உள்ளிட்டவை போதுமான அளவு கையிருப்பில் உள்ளன" என்று சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணன் கூறினார்.



திருவண்ணாமலை மாவட்டம் போளூர் சட்டமன்றத் தொகுதி வாக்காளர் பட்டியலில் பூத் எண் 86,87 ல் பெயர் சேர்த்தல் , நீக்கல், முகவரி மாற்றம் சிறப்பு முகாம் பத்தியாவரம் புனித வளனார் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்று வருகிறது. இதை முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் மற்றும் தமிழ் நாடு காங்கிரஸ் எஸ் சி துறை மாநில துணைத் தலைவர் பத்தியாவரம் அ.அன்புதாஸ் நேற்று பார்வையிட்டு பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார். ஆன்ரோஸ் மற்றும் வசீகரன் உடனிருந்தனர்.

# புளியங்குடி எம்பிசி டிரஸ்டில் மக்கள் உதவி கூட்டமைப்பு சார்பில் தீபாவளி சிறப்பு விருந்து

தென்காசி , நவ. 06–

தென்காசி மாவட்டம்- புளியங்குடியில் கடந்த 23 வருடங்களாக எம்பிசி டிரஸ்ட் ஆனது சி.பெருமாள் சின்னசாமி கீழ் இயங்கி வருகிறது. இந்த டிரஸ்டில் 50 க்கும் மேற்பட்ட முதியோர்கள் வசித்து வருகிறார்கள், இவர்களுக்கு அந்த டிரஸ்ட் மூலம் மூன்று வேளை தினமும் உணவளித்து வருகின்றனர்,200க்கும் மேற்பட்ட முதியோர்களுக்கு தீபாவளி பண்டிகையை முன்னிட்டு அங்கு இருக்கும் முதியோர்களுக் குக்கும்சேர்த்து மக்கள் உதவி கூட்டமைப்பு மற்றும் மருதம் மாடசாமி கலைவாணி தொண்டு அறக்கட்டளை சார்பில் மதிய அறுசுவை விருந்தும் , ஒரு சொல் ஜவுளி ஸ்டோர் மூலம் தீபாவளி புத்தாடையும் வழங்கப்பட்டது.



இந்த நிகழ்ச்சியில் எம்பிசி டிரஸ்ட் தலைமை சி. பெருமா , நிர்வாக இயக்குனர் சி. முகேஷ் கபில் தேவ், அலுவலர் எம். விசாலி முகேஷ், மக்கள் உதவி கூட்டமைப்பு சார்பில் சாவனா செய்யது, ஒருசொல் மாடசாமி என்ற மணி, மருதம் மாடசாமி கலைவாணி தொண்டு அறக்கட்டளை சார்பில் கற்பகராஜா, சுரேஷ்குமார் மற்றும் மருதம் பயிற்சி மையம் பயிற்றுநர்கள் , புளியங்குடி தமுமுக முகமது அனீஸ், அதிமுக நகர மாணவரணி அய்யல் குருநாதன், சிவராமன், காளிராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த எம்பிசி டிரஸ்டின் நிர்வாக இயக்குனர் முகேஷ் கபில்தேவ் கூறியதாவது 23 வருடமாக நாங்கள் இந்த டிரஸ்டை நடத்தி வருகிறோம் என்று கூறினார்.

உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரின் 37-வது போட்டி

# சாதனை

## தென் ஆப்பிரிக்க அணியை 243 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி சச்சின் டெண்டுல்கரின் சாதனையை சமன் செய்தார். ஜடேஜா அற்புதமாக பந்து வீசி 5 விக்கெட்களை கைப்பற்றி இருந்தார்.

**கொல்கத்தா, நவ. 6–**

**நடப்பு உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரின் 37-வது போட்டியில் இந்தியா மற்றும் தென் ஆப்பிரிக்க அணிகள் விளையாடின. இதில் தென் ஆப்பிரிக்க அணியை 243 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி உள்ளது இந்திய அணி. பேட்டிங்கில் கோலி சதம் விளாசி சச்சின் டெண்டுல்கரின் சாதனையை சமன் செய்தார். ஜடேஜா அற்புதமாக பந்து வீசி 5 விக்கெட்களை கைப்பற்றி இருந்தார்.**




கொல்கத்தா நகரில் உள்ள ஈடன் கார்டன்ஸ் கிரிக்கெட் மைதானத்தில் இந்தப் போட்டி நடைபெற்றது. இதில் டாஸ் வென்ற இந்திய அணி பேட்டிங் தேர்வு செய்தது. 50 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 326 ரன்கள் எடுத்தது இந்தியா. கேப்டன் ரோகித் சர்மா மற்றும் ஷுப்மன் கில் இணைந்து 62 ரன்களுக்கு பார்ட்னர்ஷிப் அமைத்தனர். ரோகித் 24 பந்துகளில் 40 ரன்கள் எடுத்து வெளியேறினார். தென் ஆப்பிரிக்க வீரர் கேஷவ் மகாராஜ் வீசிய அற்புதமான பந்தில் க்ளீன் போல்ட் ஆனார் கில்.

தொடர்ந்து ஸ்ரேயஸ் ஐயருடன் இணைந்து பலமான கூட்டணி அமைத்தார் கோலி. தொடக்கத்தில் இருவரும் நிதானமாக ரன் சேர்த்தனர். அவர்களது ஆட்டம் அருமையாக இருந்தது. இருவரும் 134 ரன்களுக்கு பார்ட்னர்ஷிப் அமைத்தனர். ஸ்ரேயஸ், 77 ரன்களில் ஆட்டமிழந்தார். கே.எல்.ராகுல் 17 பந்துகளில் 8 ரன்கள் எடுத்து வெளியேறினார். சூர்யகுமார் யாதவ் 14 பந்துகளில் 22 ரன்கள் விளாசினார். ஜடேஜா 15 பந்துகளில் 29 ரன்கள் எடுத்தார்.

மறுபக்கம் கோலி நிலையாக ஆடி ரன் சேர்த்தார். இந்தப் போட்டியில் 121 பந்துகளில் 101 ரன்கள் எடுத்தார் அவர். மொத்தம் 10 பவுண்டரிகளை ஸ்கோர் செய்தார். இது ஒருநாள் கிரிக்கெட் அரங்கில் அவர் பதிவு செய்துள்ள 49-வது சதம் ஆகும். இதன் மூலம் சச்சின் டெண்டுல்கரின் சாதனையை அவர் சமன் செய்தார். நேற்று அவரது பிறந்தநாள் என்பது கூடுதல் சிறப்பு.

327 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை தென் ஆப்பிரிக்கா விரட்டியது. அந்த அணி தொடக்கம் முதலே விக்கெட்களை சீரான இடைவெளியில் இழந்தது. அதன் காரணமாக அந்த அணியால் பெரிய அளவில் பார்ட்னர்ஷிப் அமைக்க முடியவில்லை. டிகாக், பவுமா, மார்க்ரம், கிளாசன், வான்டர் டுசன், மில்லர், கேஷவ் மகாராஜ், யான்சன், ரபாடா, இங்கிடி ஆகியோர் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். 27.1 ஓவர்களில் 83 ரன்கள் எடுத்து ஆல் அவுட் ஆனது தென் ஆப்பிரிக்கா. அதன் மூலம் 243 ரன்கள் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியில் ஜடேஜா 9 ஓவர்கள் வீசி 5 விக்கெட்களை கைப்பற்றி இருந்தார். பவுமா, கிளாசன், மில்லர், கேஷவ் மகாராஜ் மற்றும் ரபாடா ஆகியோரது விக்கெட்களை அவர் கைப்பற்றி இருந்தார். ஷமி மற்றும் குல்தீப் தலா 2 விக்கெட்களை வீழ்த்தி இருந்தனர். சிராஜ் ஒரு விக்கெட் கைப்பற்றினார். விராட் கோலி, ஆட்ட நாயகன் விருதை வென்றார்.

---

டெல்லியில் தொடக்கப்பள்ளிகளுக்கு விடுமுறை நீட்டிப்பு

# அதிகரிக்கும் காற்று மாசுவால் குழந்தைகள் கடும் அவதி

டெல்லி, நவ. 6–

டெல்லியில் அதிகரித்து வரும் காற்று மாசு காரணமாக தொடக்கப்பள்ளிகளுக்கு அறிவிக்கப்பட்டிருந்த விடுமுறையை அரசாங்கம் மேலும் நீட்டித்துள்ளது.



டெல்லியில் காற்று மாசு அபாயகர அளவைத் தாண்டியுள்ளது. நேற்று காலை நிலவரப்படி காற்று தரக்குறியீடு 460 புள்ளிகளை எட்டியது. தொடர்ந்து 6வது நாளாக அபாயகர அளவைத் தாண்டியிருக்கும் காற்று மாசு காரணமாக குழந்தைகள் மற்றும் வயதில் மூத்தோர் கடும் அவதியடைந்து வருகின்றனர்.

இதனைத்தொடர்ந்து தொடக்கப்பள்ளிகளுக்கு நவ.5 வரை விடுமுறை அளித்து டெல்லி அரசு உத்தரவிட்டிருந்தது. அந்த விடுமுறை நேற்றுடன் முடிவடைவதால், தொடக்கப் பள்ளிகளுக்கான விடுமுறையை நவ.10 வரை நீட்டித்து புதிய உத்தரவு வெளியாகி உள்ளது.

6முதல் 12வரையிலான சீனியர் மாணவர்களுக்கு விடுப்பு அளிக்கலாமா அல்லது ஆன்லைன் வாயிலாக கற்றல்-கற்பித்தல் பணிகளை தொடரலாமா என்பது குறித்து பள்ளிகளே முடிவு எடுக்க அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. நடப்பு நிலவரப்படி டெல்லியில் கம்பளி போர்வை போல படிந்திருக்கும் காற்று மாசு தணிவதாகதெரியவில்லை.

உலக சுகாதார நிறுவனம் அனுமதித்த கட்டுப்பாடுள்ள காற்று மாசு அளவைவிட டெல்லியின் பாதிப்பு 80 முதல் 100 மடங்கு அதிகரித்துள்ளது. இதனால் கண்கள் மற்றும் நுரையீரல் பாதிப்புக்கு அதிகமானோர் ஆளாகி உள்ளனர்.

---

## தேர்தலுக்கு முன்பு பெருமாள் பாதத்தில் வேட்பு மனு முதல்வர் சந்திரசேகர ராவின் சென்டிமென்ட் பலிக்குமா

ஹைதராபாத், நவ.6–

தெலங்கானா முதல்வர் சந்திரசேகர ராவ், தேர்தலை சந்திக்கும் முன்பு சித்திபேட்டையில் உள்ள பெருமாள் கோயிலுக்கு சென்று பெருமாள் பாதத்தில் வேட்பு மனு தாக்கல் செய்வதை வழக்கமாக கொண்டுள்ளார். அதன்படி அவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை சித்திபேட்டை கோயிலுக்கு சென்று பெருமாள் பாதத்தில் வேட்பு மனுவை வைத்து வழிபட்டார். இந்த சென்டிமென்ட் இம்முறை அவருக்குகை கொடுக்குமா என்பது டிசம்பர் 3-ம் தேதி தெரியவரும்.



தெலங்கானா மாநிலம் உருவானது முதல் தொடர்ந்து 2 முறை முதல்வராக தேர்ந்தெடுக்கப்பட்ட சந்திரசேகர ராவ், 3-வது முறையாக வென்று ஹாட்ரிக் சாதனை படைக்கும் முனைப்பில் உள்ளார். வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் 100 தொகுதிகளுக்கு மேல் கைப்பற்றி ஆட்சி அமைப்போம் என அவர் உறுதியாக கூறி வருகிறார். ஆன்மிகவாதியான அவர், 3-வது முறை ஆட்சி அமைப்பதற்காக சாரதா பீடாதிபதியான ஸ்வரூபானந்த சுவாமியின் தலைமையில் அண்மையில் ராஜசியாமள யாகத்தை 3 நாட்கள் நடத்தி முடித்தார். வரும் 9-ம் தேதி கஜ்வேல் மற்றும் காமாரெட்டி ஆகிய சட்டப்பேரவை தொகுதிகளுக்கு சந்திரசேகர ராவ் வேட்பு மனு தாக்கல் செய்ய உள்ளார்.

ஒவ்வொருதேர்தலில் போட்டியிடுவதற்கு முன்பாகசித்திபேட்டை மாவட்டம், சங்கநூரு மண்டலம், கோனய்யபல்லி கிராமத்தில் உள்ள ஸ்ரீ வெங்கடேச பெருமாள் கோயிலுக்கு சென்று பெருமாள் பாதத்தில் வேட்பு மனுவை சமர்ப்பித்துவிட்டு, சிறப்பு பூஜைகள் செய்த பின்னர் சந்திரசேகர ராவ் வேட்பு மனுவை தாக்கல் செய்வது வழக்கம். இதன்படி அவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை தனது மருமகன் ஹரீஷ் ராவ், கட்சி நிர்வாகிகள், சில வேட்பாளர்களுடன் சித்திபேட்டை ஸ்ரீ வெங்கடேஸ்வர பெருமாள் கோயிலுக்கு சென்றார்.

அங்கு சந்திரசேகர ராவை பொதுமக்கள், பெண்கள்உற்சாகத்துடன் வரவேற்றனர். அதன் பின்னர் அவர் சிறப்பு பூஜைகள் நடத்தி, வேட்பு மனுக்களை பெருமாளின் காலில் வைத்து வழிபட்டார். இந்த சென்டிமென்ட் இம்முறை பலிக்குமா என்பது வாக்கு எண்ணிக்கைநடைபெற உள்ள டிசம்பர் 3-ம்தேதி தெரியவரும்.

---

## சுதர்சன்வித்யா மந்திர் மெட்ரிக்மேல்நிலைப்பள்ளியில் பாரம்பரிய விளையாட்டு திருவிழா

**புதுக்கோட்டை, நவ. 6–**

புதுக்கோட்டைசுதர்சன் வித்யா மந்திர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் மறந்து போன தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகளை நினைவூட்டும் வகையில் பாரம்பரிய விளையாட்டு திருவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.



எம்பள்ளிமாணவர்கள் இந்திய வரைபட வடிவத்தில் அமர்ந்து பலூன்களைபறக்கவிட்டும் சிறப்புவிருந்தினராககலந்து கொண்ட புதுக்கோட்டை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதாபிரியா எல்.கே.ஜி. மாணவர்களின் ஓட்ட பந்தய விளையாட்டை துவக்கி வைத்தார். இதில் எல்.கே.ஜி. முதல் 5 ஆம் வகுப்பு படிக்கும் மாணவ மாணவிகள் கலந்து கொண்டு விளையாடி மகிழ்ந்தனர். உடன் பள்ளியின் தலைவர் முருகேசன், துணைத்தலைவர்செல்லம் முருகேசன், முதல்வர் போஸ், தலைமை செயல் அலுவலர் வேல்சாமி மற்றும் உடற்கல்வி ஆசிரியர் தலைமையில் பள்ளி ஆசிரியர்கள் இணைந்து விழாவிற்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்தனர்.

---

## ஜம்மு காஷ்மீரில் நெடுஞ்சாலையில் கிடந்த டிபன்பாக்ஸ் வெடிகுண்டு

ஜம்முகாஷ்மீர், நவ. 6–

ஜம்முகாஷ்மீரில் நெடுஞ்சாலையில் கிடந்த டிபன் பாக்ஸ் வெடிகுண்டை பறிமுதல் செய்துள்ள பாதுகாப்பு படையினர், அப்பகுதியில் பாதுகாப்பை அதிகரித்துள்ளதோடு, விசாரணைமேற்கொண்டு வருகின்றனர்.



ஜம்முவின் நக்ரோடா பகுதியில் உள்ள சித்ரா நார்வால் தேசிய நெடுஞ்சாலையில் மர்ம பொருள்ஒன்றுகிடப்பதாக நேற்று முன்தினம் சனிக்கிழமை பாதுகாப்பு படையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து மோப்பநாய்கள் மற்றும் மெட்டல் டிடெக்டர்களுடன் வெடிகுண்டு நிபுணர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்தனர்.

அப்போது, சாலையில் கிடந்த மர்மப் பொருள், மேம்படுத்தப்பட்ட வெடிபொருள் வகையை சேர்ந்த டிபன் பாக்ஸ் என்பதும், சுமார் 2 கிலோ எடை இருந்ததும் தெரியவந்தது. இதையடுத்து அந்த குண்டை செயலிழக்கச் செய்த வெடிகுண்டு நிபுணர்கள், அதனை பத்திரமாக அகற்றினர்.

இதனிடையே, இந்த வெடிகுண்டை சாலையில் வீசிச்சென்றது யார் என்பது குறித்து வழக்குப்பதிவு செய்து போலீஸார் தீவிரமாக விசாரித்து வருகின்றனர். நெடுஞ்சாலையை சேதப்படுத்தும் நோக்கில் இந்த வெடிகுண்டு வைக்கப்பட்டதா அல்லது வேறு சதிச்செயல் காரணமா என்ற கோணங்களில் விசாரணை நடைபெறுகிறது. இந்த சம்பவத்தால் அங்கு பெரும் பரபரப்பு நிலவி வருகிறது

---

## தொடர்மழையினால் வைகை அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு 5 மாவட்ட மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை

ஆண்டிபட்டி, நவ. 6–

வைகை அணையின் நீர்மட்டம் 66 அடியாக உயர்ந்ததால் நேற்று அதிகாலை முதற்கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டது. வைகை அணைக்கான நீர்வரத்து 3.5 மடங்காக அதிகரித்துள்ளதால் 24 மணி நேர தீவிர கண்காணிப்பில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். வரும் 10-ம்தேதி பாசனத்துக்காக நீர் திறக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



தேனி மாவட்டத்தில் கோடைமழை மற்றும் தென்மேற்கு பருவமழை போதிய அளவு பெய்யவில்லை. இதனால் சில மாதங்களாக வைகை அணைக்கு நீர்வரத்து குறைவாகவே இருந்தது. ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் முதல்போகத்துக்கும், செப்டம்பரில் 2-ம் போக சாகுபடிக்கும் அணையில் இருந்துநீர் திறக்கப்படுவது வழக்கம். ஆனால் நீர்மட்டம் உயராததால் பாசனத்துக்கு நீர் திறக்க முடியாத நிலை ஏற்பட்டது. இருப்பினும் மதுரை, தேனி, சேடபட்டி, ஆண்டிபட்டி குடிநீர் திட்டங்களுக்காக விநாடிக்கு 69 கனஅடிநீர் மட்டும் தொடர்ந்து திறந்து விடப்பட்டது.

இந்நிலையில் கடந்த சில வாரங்களாக நீர்பிடிப்புப் பகுதியில் கனமழைபெய்துவருகிறது. இதனால் மூலவைகை, முல்லைப் பெரியாறு உள்ளிட்ட அணையின் பிரதான நீராதாரங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. மேலும் மழைக்காலங்களில் மட்டும் நீரோட்டம் இருக்கும் பாம்பாறு, வரட்டாறு, கொட்டக்குடி, சுருளியாறு, வராகநதி உள்ளிட்ட ஆறுகளிலும் நீர்வரத்து தொடங்கியது. இதனால் வைகை அணைக்கு நீர்வரத்து வெகுவாய் அதிகரித்தது. கடந்த சில வாரங்களுக்கு முன்பு 49 அடியாக இருந்த நீர்மட்டம் மெல்ல உயரத் தொடங்கியது. இந்நிலையில் நேற்று அதிகாலை 3 மணிக்கு நீர்மட்டம் 66.01 அடியை (மொத்த உயரம் 71) எட்டியது.

இதனைத் தொடர்ந்த முதற்கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை அறிவிக்கப்பட்டது. இதன்படி தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் உள்ளிட்ட 5 மாவட்டங்களின் கரையோரத்தில் வசிப்பவர்கள் பாதுகாப்பாகஇருக்கும்படி நீர்வளத்துறையினர் கேட்டுக் கொண்டுள்ளனர். தேனி மாவட்டத்தைப் பொறுத்தளவில் இன்னும் சில தினங்களுக்கு கனமழை தொடரும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது. இந்நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை விநாடிக்கு 885 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று 3 ஆயிரத்து 177 கனஅடியாக அதிகரித்தது. குறைவான நீரே வெளியேற்றப்பட்டு வருவதாலும், மழையும், நீர்வரத்தும் அதிகரித்து கொண்டே இருப்பதாலும் விரைவில் நீர்மட்டம் முழுக்கொள்ளளவை எட்டும் நிலை உள்ளது.

ஆகவே அதிகாரிகள் 24 மணிநேரமும் நீர்வரத்து அளவீடு குறித்து தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். நீர்மட்டம் 68.5 அடியை எட்டியதும் இரண்டாம் கட்ட அபாய எச்சரிக்கையும், 69 அடியில் 3-ம் கட்ட எச்சரிக்கையும் அறிவிக்கப்பட உள்ளது.

இந்நிலையில் மதுரை மாவட்டம் மேலூர், பேரணை, கள்ளந்திரி பகுதி பாசனத்துக்காக வரும் 10-ம் தேதி தண்ணீர் திறக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இதன் மூலம் 45ஆயிரத்து 41 ஏக்கர் விளைநிலங்கள் பயன்பெற உள்ளன. ஐந்து மாவட்டங்களின் பாசன மற்றும் குடிநீர் ஆதாரமாக உள்ள வைகைஅணையில் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருவதால் அப்பகுதி விவசாயிகளும், பொதுமக்களும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

---

## தமிழக மீனவர்கள் 8 பேரை தாக்கி ரூ.2 லட்சம் பொருட்கள் கொள்ளை : இலங்கை கடல் கொள்ளையர்கள் மீண்டும் அத்துமீறல்

**நாகப்பட்டினம், நவ. 6–**

இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து, தமிழக மீனவர்கள்8பேரைத்தாக்கி, ரூ. 2 லட்சம் மதிப்பிலான பொருட்களை இலங்கை கடல் கொள்ளையர்கள் கொள்ளையடித்துச் சென்றனர்.



மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடியை அடுத்த புதுப்பேட்டையைச் சேர்ந்தவர் செந்தில்குமார் (38). ஃபைபர் படகு உரிமையாளர். இவர், சக மீனவர்களுடன் கோடியக்கரையில் தங்கி, மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்தார்.

இவரும், அதே பகுதியைச் சேர்ந்த மதன் (20), சிவக்குமார் (50), நித்திக்குமார் (16) ஆகியோரும் வெள்ளிக்கிழமை மதியம் கோடியக்கரைக்கு கிழக்கே மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். நேற்று முன்தினம் சனிக்கிழமை அதிகாலை ஒரு படகில் வந்த கடல்கொள்ளையர்கள், செந்தில்குமார் படகில் ஏறி, மீனவர்களைக் கட்டையால் தாக்கி, பேட்டரி, ஜிபிஎஸ் கருவி, டார்ச் லைட் மற்றும் ரூ.50 ஆயிரம் மதிப்பிலான மீன்களைக் கொள்ளையடித்துச் சென்றனர்.

இதேபோல, நாகை மாவட்டம் வானவன்மகாதேவி மீனவர்காலனியைச் சேர்ந்த சிதம்பரம் (60), தனது ஃபைபர் படகில், அதே பகுதியைச் சேர்ந்த சிவக்குமார் (30), முகுந்தன் (18), கிருஷ்ணசாமி (65) ஆகியோருடன் கோடியக்கரைக்குகிழக்கே 15 நாட்டிக்கல் மைல் தொலைவில்மீன்பிடித்துக் கொண்டிருந்தார். அங்கு வந்த கடல் கொள்ளையர்கள், மீனவர்கள் 4 பேரையும் தாக்கி, 200 கிலோ வலை, ஜிபிஎஸ் கருவி, பேட்டரி, செல்போன், டார்ச்லைட் மற்றும் 60 கிலோ மீன்கள் என ரூ.1.50 லட்சம் மதிப்பிலான பொருட்களை கொள்ளையடித்துச் சென்றுவிட்டனர்.

பின்னர் மீனவர்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை வானவன்மகாதேவி கடற்கரைக்கு வந்து சேர்ந்தனர். இதுகுறித்து கீழையூர் கடலோரக் காவல் படை போலீஸார் விசாரித்து வருகின்றனர். இலங்கை கடல் கொள்ளையர்களின் அத்துமீறல்கள், தமிழக மீனவர்களிடையே அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

காட்பாடியில் இரும்பு கழிவுகளை தீ வைத்து எரித்த போது விபரீதம்

# தீப்பொறிகள் பட்டு சம்பவ இடத்திலேயே உரிமையாளர் உயிரிழப்பு. சிசிடிவி காட்சிகள் வெளியாகி பரபரப்பு

வேலூர்,நவ6

வேலூர் மாவட்டம் காட்பாடி அடுத்த கல்புதூர் பகுதியில் பழைய இரும்பு கடை நடத்தி வந்தவர் விநாயகமூர்த்தி (45) இவர் கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பு இரும்பு கழிவுகள் மற்றும் கண்ணாடிகளை தீ வைத்து எரித்துள்ளார். தீயிலிருந்து திடீரென ஒரு பொருள் வெடித்து சிதறி விநாயகமூர்த்தி கண் மற்றும் வயிற்றுப் பகுதியில்



கிழித்துக்கொண்டு சென்றது. இதனால் ரத்த வாந்தி எடுத்து சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்துள்ளார். இதுகுறித்து காட்பாடி காவல் நிலைய போலீசார் விசாரணை நடத்தி வரும் நிலையில் இது தொடர்பான சிசிடிவி காட்சிகள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதில் தீயிட்டுகொளுத்தும் போது ஒரு பொருள் வெடித்து சிதறுவதும், அருகில் நின்று கொண்டிருந்த விநாயகமூர்த்தி மீதுநெருப்புபொறிகள் தெறித்து விழுவதும் பின்னர் அவர் அங்கேயே மயங்கி விழுந்து இறக்கும் சோகக் காட்சி கண்காணிப்பு கேமிராவில் பதிவாகியுள்ளது.இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது



வேலூர் மாவட்டம், அணைக்கட்டு வட்டம், ஊசூர் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் வாக்காளர் பட்டியல் பெயர் சேர்த்தல், நீக்கல், திருத்தம் முகாம் நடைபெறுவதை மாவட்ட ஆட்சித் தலைவர் பெ. குமாரவேல் பாண்டியன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது துணை ஆணையாளர் (கலால்) முருகன், அணைக்கட்டு வட்டாட்சியர் வேண்டா ,உட்பட பலர் உடன் இருந்தனர்.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு

# பாகல்மேடு ஸ்ரீ வரசக்தி விநாயகர் கோயில் அறக்கட்டளையின் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கல்



ஊத்துக்கோட்டை,நவ6–

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், பாகல்மேடுஊராட்சியில் இயங்கி வரும் ஸ்ரீ வரசக்தி விநாயகர் கோயில் அறக்கட்டளையின் சார்பில் 60 விழியாற்றல் குறைந்தோருக்கும்,70 மாணவர்களுக்கும் என மொத்தம் 130 பேருக்கு தீபத்திருநாள் தீபாவளி பண்டிகையை கொண்டாடும் வகையில் ஸ்வீட், பட்டாசு, பாய், மதிய உணவு உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி பாகல்மேடு காமராஜர் திருமண மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு, ஸ்ரீ வரசக்தி விநாயகர் கோயில் அறக்கட்டளையின் நிறுவனர் சமூகசேவகர் த.கண்ணன் தலைமை தாங்கினார். ஸ்ரீ வரசக்தி விநாயகர் கோயில் அறக்கட்டளையின் நிர்வாகி திவ்யா முன்னிலை வகித்தார். இதில்,சிறப்பு அழைப்பாளர்களாக ஞான குருநாதர் தவத்திரு வாதவூரடிகள், காவேரி மருத்துவமனையின் டாக்டர் வி.பி நாராயணமூர்த்தி, பாகல்மேடு ஊராட்சிமன்ற தலைவர் தேவகிதங்கபிரகாசம், திருவள்ளூர் ரோட்டரி தீபம் தலைவர் சக்சஸ் கார்த்திகேயன், தனலட்சுமி ஆகியோர் கலந்து கொண்டு 130 பயனாளிகளுக்கு தீபத்திருநாளாம் தீபாவளி பண்டிகையை கொண்டாடும் வகையில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஏழை-எளிய மக்கள் மனம் குளிர சமூக சேவகர் கண்ணன் செய்து வரும் இப்பணியை பாராட்டி பேசினர்.

மேலும், கண்ணன் இவ்வாறான சமூக சேவைக்கு அடுத்த தலைமுறையை தனது மனைவிமற்றும்மகள்களையும் ஈடுபடுத்தி அவர்களும் மன மகிழ்ச்சியுடன் செய்து வரும் இப்பணியை நெகிழ்ச்சியுடன் நினைவு கூர்ந்தனர். முன்னதாக அனைவரையும் தேஜஸ்வினி வரவேற்றார். முடிவில்,தேஜஸ்ஸ்ரீ நன்றி கூறினார்.

10 ஆண்டுகளுக்கும் மேலாக அசுத்தமாக இருந்த கோவில் குளத்தை

# அறங்காவலர் குழுத் தலைவர் இளைஞர்களுடன் சேர்ந்து சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டார்

காஞ்சிபுரம்,நவ6

காஞ்சிபுரம் ரங்கசாமி குளம் அருகே உள்ள 108 திவ்ய தேசங்களில் ஒன்றான பிரசித்தி பெற்ற ஸ்ரீ அஷ்டபுஜ பெருமாள் திருக்கோவிலில் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக அறங்காவலர் குழுத் தலைவர் உறுப்பினர்கள் இல்லாமல் கோவிலில் மேற்கொள்ளப்பட்டும் பணிகளை செய்யப்படாமல் கிடைப்பிலேயே போடப்பட்டு வந்த நிலையில் கோவிலில் நிலங்களும் சுத்தம் செய்யாமல்இருந்து வந்தனர்.



இந்நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு புதிய அறங்காவலர் குழுத் தலைவராக எஸ்.கே.பி.எஸ். சந்தோஷ் குமார் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்நிலையில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் வாரத்திலேயே ஞாயிற்றுக்கிழமை நேற்று விடுமுறை நாள் என்பதால் அஷ்டபுஜ பெருமாள் கோவிலில் நுழைவு வாயிலில் உள்ள கோவில் குளத்தை அப்பகுதியை சேர்ந்த 50-க்கும் மேற்பட்ட இளைஞர்களுடன் சேர்ந்து கோவில் குளத்தை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு இந்த குளம் மழை நீரை சேகரிக்கப்பட்டு சுற்றி உள்ள பகுதிகளுக்கு நிலத்தடி நீர் ஆதாரமாக விளங்க பயன்படுத்தப்பட்ட இந்த குளம் சுத்தம் செய்யாமல் நீர்வழி பாதைகள் அடைக்கப்பட்டு அசுத்தமாக இருந்த நிலையில் தற்போதுவடகிழக்குபருவமழை தொடங்குவதற்குமுன்பேகுளத்தை சுத்தம் செய்து வருவதால் சுற்றியுள்ள பகுதிகளுக்கு நிலத்தடி நீர் உயரம் என எதிர்பார்க்கப்படுவதால் அப்பகுதி மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

காரைக்குடியில் ராஜராஜன் பள்ளி

# 4 வயது மாணவி கிருத்திக்ஷா சாதனை முன்னாள் துணைவேந்தர் எஸ்.சுப்பையா பாராட்டு



புதுக்கோட்டை , நவ. 6–

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி ராஜராஜன் சி.பி.எஸ்.சி.பள்ளியில் பயிலும் நான்கு வயது சிறுமி கிருத்திக்ஷா. இவர் திருக்குறள், ஆத்திச்சூடி, எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, மாநிலங்கள் பெயர் மற்றும் தலைநகர் பெயர்கள் அனைத்தையும் மனப்பாடமாக சொல்லி அனைவரையும் அசத்தி வருகிறார்.

மாணவியின் பெற்றோர் ,பள்ளி முதல்வர் வடிவாம்பாள் ஊக்கத்தால் கிருத்திக்ஷா சாதனை படைத்ததை பள்ளி ஆலோசகரும், முன்னாள் துணைவேந்தருமான முனைவர். எஸ்.சுப்பையா நினைவு பரிசு வழங்கி பாராட்டினார்.

# ஸ்ரீ ராம் பொறியியல் கல்லூரியில் தேசிய தொழில்நுட்ப சிந்தனை அரங்கம் நடைபெற்றது

திருவள்ளூர், நவ. 06 –

ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில் தேசிய தொழில்நுட்ப சிந்தனை அரங்கம் நடைபெற்றது. இதில் ஸ்ரீ ராம் பொறியியல் கல்லூரியின் முதல்வர் சி.பி. கார்த்திகேயன் தலைமை வகித்தார். மேலும் சிறப்பு விருந்தினர்களாக வி.ராஜேஷ் குமார் (தலைமை மேலாளர் மற்றும் பி.பெருமாள் ராஜா (மேலாளர், AGSC) ஆகியோர் பங்கேற்றனர்.



நிகழ்ச்சியின் தொடக்கமாக பேராசிரியர் ஜி.முத்துகுமார் வரவேற்புரை வழங்கினார். கணிப் பொறியியல் துறை மற்றும் செயற்கை நுண்ணறிவு துறையைசேர்ந்த இறுதியாண்டு மாணவர்கள் எஸ்.சந்தோஷ் குமார் மற்றும் டி.பிஜூடேனியல் தேசிய தொழில்நுட்ப சிந்தனை அரங்கத்தின் நோக்கத்தினை விரிவாக கூறினார்கள். மேலும் பேராசிரியை எ.மஞ்சு பிரியா மற்றும் பேராசிரியை வி.இந்துமதி சிறப்பு விருந்தினர்களை வரவேற்று வரவேற்புரை ஆற்றினார்கள்.

ஸ்ரீ ராம் பொறியியல் கல்லூரியின் முதல்வர் சி.பி. கார்த்திகேயன் சிந்தனை அரங்கத்தின் முக்கியத்துவம் பற்றி சிறப்புரை வழங்கினார். 1995 ஆம் ஆண்டு தொடங்கிய கல்லூரியில் பல்கலை கழக அளவில் பத்துக்கும் மேற்பட்ட தங்க பதக்கம் வென்ற மாணவர்களை இக்கல்லூரி உருவாக்கியுள்ளது என்றும், 83 மாணவர்கள் அண்ணா பல்கலை கழக தேர்வு மதிப்பெண்கள் பட்டியலில் முன்னிலை வகித்தனர் எனவும் பேசினார். நிகழ்ச்சியினை முன்னின்று ஏற்பாடு செய்த பேராசிரியர்களையும், மாணவர்களையும் வெகுவாக பாராட்டினார்.

DEVXPO 2023 சிந்தனை அரங்கத்தில் தொழில்நுட்ப நிகழ்வுகளாக தாள் விளக்கக்காட்சி, பிழைத்திருத்தம், மோக் நேர்காணல்,பிரையன்ஸ்ட்ரோம் மற்றும் தொழில்நுட்பம் அல்லாத நிகழ்வுகளாக பாக்ஸ் கிரிக்கெட், ஐபிஎல் ஏலம், ஒலி சிசில் போன்ற வேடிக்கையான நிகழ்வுகள் நடைபெற்றன.

இருபத்தைந்து மாணவ மாணவியர் கலந்துகொண்ட தாள் விளக்க காட்சியில் முதல் பரிசினை மீனாட்சி பொறியியல் கல்லூரியை சேர்ந்த பிரியதர்ஷினி என்ற மாணவியும், இரண்டாம் பரிசை வேல்டெக் மல்டிடெக் பொறியியல் கல்லூரியை சேர்ந்த அர்ஜுன் என்ற மாணவரும் வென்றனர்.

பிழைத்திருத்த போட்டியில் முதல் பரிசினை சாய்ராம் பொறியியல் கல்லூரி மாணவர் சிவம் குமார் பாண்டே தட்டி சென்றார். இரண்டாம் பரிசினை வேலம்மாள் பொறியியல் கல்லூரியின் மாணவர் மோகன்ராஜ் வென்றார். மோக் நேர்காணல் போட்டியில் முதல் பரிசு வேல்டெக் மல்டிடெக் பொறியியல்கல்லூரியைசேர்ந்த குஷால் என்ற மாணவரும், இரண்டாம் பரிசினை செயின்ட் பீட்டர்ஸ் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் சரவண பாண்டி வென்றனர்.

பிரையன் ஸ்ட்ரோம் போட்டியில் முதல் பரிசினை ஜே.என்.என். பொறியியல் கல்லூரி மாணவர் விக்னேஷ் வென்றார். இரண்டாம் பரிசினை ஸ்ரீ ராமச்சந்திரா கல்லூரியை சேர்ந்த மாணவர் ஹரி வென்றார். போட்டியில் வெற்றி பெற்ற மாணவர் - மாணவியர்களுக்கு கல்லூரி நிர்வாக இயக்குநர் பாலசுப்ரமணியம் மற்றும் சிறப்புவிருந்தினர்கள் பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கினர். நிகழ்ச்சியின் இறுதியாக பேராசிரியை எம்.பிரியங்கா நன்றி உரை வழங்கினார்.

# சங்கரன்பந்தலில் தமிழக ஹயர் கூட்ஸ் ஓனர்ஸ் அசோசியேசன் மாதாந்திரக் கூட்டம்

தரங்கம்பாடி, நவ- 6:

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுக்கா தமிழக ஹயர் கூட்ஸ் ஓனர்ஸ் அசோசியேசன் மாதாந்திர கூட்டம் சங்கரன் பந்தலில் ராசிக் தரங்கம்பாடி வட்டார தலைவர் ராசிக் தலைமையில் நடைபெற்றது. சங்கரி ஆடியோஸ் உரிமையாளர் மா.பக்கிரிசாமி, செயலாளர் சந்தன சாமி, பொருளாளர் மாணிக்க. அருண்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



அதனைத் தொடர்ந்து மாவட்ட பிரதிநிதி ஸ்டாலின் மற்றும் மாவட்டத் துணைச் செயலாளர் கிருபாகரன், துணைத் தலைவர் மகேந்திரன் சங்க வளர்ச்சிக்கான கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர்.

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

1. ஏழாவது மாநில மாநாட்டை சிறப்பாக நடத்திய மாநில தலைமை சங்கத்திற்கு வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது.

2. தமிழகத்திலேயே முதலாவதாக கன்னட காவிரி பிரச்சனையை முன்னெடுத்து தலைமையிடம் உரிய அனுமதி பெற்று இந்தியாவே திரும்பிப் பார்க்கும் அளவிற்கு கண்டன போராட்டம் நடத்திய மாவட்ட தலைவர் பந்தல் கண்ணன், செல்வகணேஷ் உள்ளிட்ட அனைத்து பொறுப்பாளர்களுக்கும் மற்றும் மாநில செயற்குழு உறுப்பினர் நக்கீரன் அவர்களுக்கும் மற்றும் அனைத்து தாலுக்கா பொறுப்பாளர்கள் உறுப்பினர்களுக்கும் மனமார்ந்த நன்றி தெரிவிக்கப்பட்டது.

3. விபத்தில் சிக்கிய ராசிக் அவர்களுக்கு மருத்துவ உதவி செய்த மாநில சங்கத்தின் அமைப்புச் செயலாளர் பந்தல் பேரரசு சிவா , துணை செயலாளர் திங்கள் கண்ணன் மற்றும் நேரடியாக சென்ற மாவட்ட பொறுப்பாளர் உள்ளிட்ட அனைவருக்காக பிரார்த்தனை செய்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

4.நமது சங்க உறுப்பினரும் மாவட்டத் துணைச் செயலாளர் கிருபாகரன் அவர்கள் விஜய் தொலைக்காட்சியில் சூப்பர் சிங்கர் தேர்வில் இரண்டாம் சுற்று வரை சென்றதற்கு பாராட்டும் அடுத்த முறை அடுத்த நிலையை அடைய வாழ்த்துக்களும் தெரிவிக்கப்பட்டது.

5. அனைத்து உறுப்பினர்களும் ஒற்றுமையுடன் ஒருங்கிணைந்து மாநில அளவில் சிறந்த தாலுக்காகவாக உருமாற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.. துணை செயலாளர் பிரபு நன்றி கூறினார்.



கொழும்பில், நடைபெறவுள்ள மலையக மக்களின் “நாம்200“ நிகழ்வில் கலந்துகொள்ள இலங்கை சென்றுள்ள இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் திருகோணமலையிலுள்ள திருக்கோணஸ்வரர் ஆலயத்திற்கு சென்று இறை வழிபாடு செய்தார். இன்நிகழ்வு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமானின் ஏற்பாட்டில் இடம்பெற்ற விசேஷ பூஜை வழிபாடுகளில் இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது, அதனை தொடர்ந்து யாழ்பாணம் சென்ற இந்தியநிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நல்லூர் கந்தசுவாமி கோயில் பூசகர்களில் ஒருவரான விஸ்வ பிரசன்னா குருக்களை புகழ்ந்து பராட்டினார். இந்தியாவின் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் ,நல்லூர் கந்தசுவாமி கோயிலில் வழிபாடுகளில் ஈடுபட்டார்.

# புஸ்ஸி ஆனந்துக்கு திருநீறு பூசி ஆசி வழங்கிய புதுச்சேரி முதல்வர்



புதுச்சேரி, நவ. 6–

உடல் நலக்குறைவு ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பிய விஜய் மக்கள் இயக்கத்தின் மாநில பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்துக்கு, புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி திருநீறு பூசி ஆசி வழங்கியுள்ளார்.

விஜய்மக்கள்இயக்கமாநில பொதுச் செயலாளரான புஸ்ஸி ஆனந்த் லியோ திரைப்படத்தின் வெற்றி விழா நிகழ்ச்சியை ஒருங்கிணைப்பதற்காக இரவு பகல் பாராமல் உழைத்ததால் திடீர் உடல் நலக்குறைவு ஏற்பட்டது. இதையடுத்து சென்னை பெரும்பாக்கத்தில் உள்ள குளோபல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இது குறித்து தகவலறிந்த நடிகர் விஜய் பதறிப்போய் மருத்துவமனைக்கே சென்று உடல் நலம் விசாரித்தார்.

இந்நிலையில் சிகிச்சை முடிந்து புதுச்சேரியில் உள்ள தனது வீட்டுக்கு திரும்பிய புஸ்ஸி ஆனந்தை, புதுச்சேரி முதலமைச்சர் ரெங்கசாமி நேற்று முன்தினம் சனிக்கிழமை வீடு தேடிச் சென்று நலம் விசாரித்தார். அப்போது புஸ்ஸி ஆனந்த் பெயரில் அர்ச்சனை செய்து பிரசாதம் எடுத்துச் சென்றிருந்த ரெங்கசாமி, அதனை புஸ்ஸி ஆனந்திற்கும் அவரது மனைவிக்கும் கொடுத்து ஆசிர்வாதம் செய்தார்.

புஸ்ஸி ஆனந்த் நெற்றியில் திருநீறு பூசி ’உனக்கு ஒன்றும் ஆகாது’ என வாழ்த்தினார். இதனால் நெகிழ்ந்து போன புஸ்ஸி ஆனந்த், புதுச்சேரி முதல்வர் ரெங்கசாமி காலில் குடும்பத்துடன் விழுந்து வணங்கி மரியாதை செலுத்தினார். ரங்கசாமிக்கு மிகவும் நெருக்கமானவரான புஸ்ஸி ஆனந்த் புதுச்சேரியில் சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர் என்பதும், நடிகர் விஜய் - ரங்கசாமி சந்திப்பு நிகழ காரணமாக இருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஜவுளி உற்பத்தியாளர்கள் போராட்டம் 20 நாட்களுக்கு உற்பத்தி நிறுத்தம்

திருப்பூர், நவ. 6–

நூல் விலை ஏற்றம், மின்கட்டண உயர்வு உள்ளிட்டவைகளை கண்டித்து ஜவுளி உற்பத்தியாளர்கள் தங்களின் 20 நாள் உற்பத்தி நிறுத்த போராட்டத்தை நேற்று தொடங்கியுள்ளனர்.

திருப்பூர், கோவை மாவட்டங்களில், விசைத்தறி ஜவுளி உற்பத்தி தொழில் பல காலமாக நடந்து வருகிறது. மின் கட்டண உயர்வு, மூலப்பொருள் விலை உயர்வு மற்றும் மார்க்கெட் மந்தநிலை உள்ளிட்ட காரணங்களால், சமீப நாட்களாக விசைத்தறி



தொழில் மிகவும் நலிவடைந்துள்ளது.

அதனால் மின் கட்டண உயர்வை வாபஸ் பெற வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி, காடா துணி உற்பத்தி சார்ந்த சிறு குறு தொழில் நிறுவனத்தினர், தொடர்ச்சியான போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், ஜவுளி உற்பத்தி நிறுவனங்கள் நூல் விலை ஏற்றம், மின் கட்டண உயர்வை கண்டித்து திருப்பூர், கோவையில் நேற்று முதல் ஜவுளித்தொழில் உற்பத்தி நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.


இந்த போராட்டம் நேற்று முதல் 20 நாட்கள் நவ 25–ம் தேதி வரை தொடர்ந்து நடத்த உள்ளதாக தமிழ்நாடு தொழில்துறை கூட்டமைப்பினர் அறிவித்துள்ளனர். இந்த வேலை நிறுத்தத்தால் பல ஆயிரம் கோடி ரூபாய் வர்த்தகம் பாதிக்கப்படும் நிலை உருவாகியுள்ளது.

# மாணவர்களைத் தாக்கிய விவகாரத்தில் மனமுருகி மன்னிப்பு கேட்டார் ரஞ்சனா நாச்சியார்

சென்னை, நவ. 6–

பேருந்தில் படியில் தொங்கியபடி சென்ற மாணவர்களை தாக்கியதற்காக, மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோரிடம் மன்னிப்பு கேட்டுள்ளார் நடிகை ரஞ்சனா நாச்சியார்.

காஞ்சிபுரம் மாவட்டம், கெருகம்பாக்கத்தைச் சேர்ந்தவர் ரஞ்சனா நாச்சியார். போரூரில் இருந்து குன்றத்தூர் நோக்கிச் சென்ற அரசு பேருந்தில் தொங்கிக் கொண்டு சென்ற மாணவர்களை கண்ட இவர் பேருந்தை நிறுத்தி ஓட்டுநர் மற்றும் நடத்துநரைக் கண்டித்தார். அத்துடன் படிக்கட்டில் தொங்கியவர்களை இறங்கிச் செல்லுமாறு ஆவேசமாக எச்சரித்தார். இறங்க யோசித்த சிலரை தாக்கினார்.



இந்த விவகாரம் சமூக வலைதளங்களில் பரபரப்பாக விவாதிக்கப்பட்ட நிலையில் ரஞ்சனா நாச்சியாரை போலீஸார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினர். 40 நாட்கள் மாங்காடு காவல் நிலையத்தில் கையெழுத்திட வேண்டும் என்ற நிபந்தனையுடன் அவருக்கு ஜாமீன் வழங்கப்பட்டது.

ஜாமினில் வெளிவந்த அவர் செய்தியாளர்களிடம் பேசினார். "மாணவர்களின் பாதுகாப்பு கருதிதான் அவ்வாறு நடந்து கொண்டேன். ஒவ்வொரு பெற்றோரும் பிள்ளைகளை பெற்று வளர்க்க எவ்வளவு கஷ்டப்பட்டு இருப்பார்கள் என்பது எனக்குதெரியும்.பேருந்தில் வரும் மாணவர்கள் நடுத்தர மற்றும் ஏழை குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகத்தான் இருப்பார்கள். அவர்கள் பாதுகாப்புடன் வீடு திரும்ப வேண்டும் என்ற நோக்கத்தில் நான் அவ்வாறு நடந்து கொண்டேன்.

அதற்காக மாணவர்களை அடித்து இருக்கக் கூடாது என்பது உண்மைதான். ஆனால் என்னுடைய செயலில் நியாயம் இருந்தது. அதற்காக மாணவர்கள் என்னை மன்னிக்க வேண்டும்.மாணவர்களை அடித்ததால் அவர்களது பெற்றோர்களும் வருத்தத்தில் இருப்பார்கள். அவர்களும் என்னை மன்னிக்க வேண்டும்" என்று ரஞ்சனா மன்னிப்பு கேட்டுள்ளார்.

# சாதிப் பெயர்களை கைவிடுங்க – இந்திய கிரிக்கெட் வீரர்களுக்கு கார்த்தி சிதம்பரம் வலியுறுத்தல்

சென்னை : நவ. 6–

‘இந்திய கிரிக்கெட் வீரர்களின் பெயரின் பின்னால் இருக்கும் சாதிப் பெயர்களை நீக்க பிசிசிஐ அறிவுறுத்த வேண்டும்’ என காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் கார்த்தி சிதம்பரம் வலியுறுத்தியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியில் விளையாடும் வீரர்களில் குறிப்பிட்ட சிலர், தங்களது பெயர்களுக்கு பின் சாதிப்பெயர்களை பயன்படுத்தி வருகின்றனர். இதை நீக்க வேண்டும் என பல்வேறு தரப்பினரும் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்றனர். அனைவரும் ரசிக்கும் கிரிக்கெட் போன்ற



விளையாட்டுகளில், இந்திய வீரர்கள் தங்களது சாதிப்பெயர்களை பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டு வருகிறது.

இந்திய அணியில் விளையாட்டும், ரோகித் சர்மா, ஸ்ரேயாஸ் ஐயர், சூர்ய குமார் யாதவ், குல் தீப் யாதவ் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் தங்களது பெயருக்கு பின்னால் சாதியை அடையாளமாக வைத்துள்ளனர். இந்நிலையில், கிரிக்கெட் வீரர்கள் தங்களது பெயர்களுக்கு பின் உள்ள சாதிப்பெயர்களை நீக்க பிசிசிஐ அறிவுறுத்த வேண்டும் என காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கார்த்தி சிதம்பரம் தனது எக்ஸ் தள பக்கத்தில் வலியுறுத்தியுள்ளார்.

வரலாறு உலகம்

# இஸ்ரேல் ராணுவம் ஹமாஸ் தலைவரை கண்டுபிடித்து ஒழிக்கும்

## பாதுகாப்பு அமைச்சர் கேலண்ட் சபதம்



**டெல் அவிவ் : நவ. 6,**

**இஸ்ரேலியப் படைகள் காசாவில் ஹமாஸ் பயங்கரவாதிகளுடன் கடும் சண்டையில் ஈடுபட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சர் கேலன்ட் தெரிவித்தார்.**

இஸ்ரேலியப் படைகள் ஹமாஸ் தலைவர் யஹ்யா சின்வாரை கண்டுபிடித்து ஒழித்துக்கட்டுவார்கள் என்று இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கேலன்ட் சபதம் செய்துள்ளார்.

கடந்த இரண்டு நாட்களில் வடக்கு எல்லை மற்றும் தெற்கில் சுற்றுப்பயணம் செய்த பின், நேற்று செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய அவர், "எவ்வளவு காலம் எடுத்தாலும் வெற்றி பெறும் வரை போராட படைகள் தயாராக இருப்பதாக ரிசர்வ் படை வீரர்கள் என்னிடம் கூறினர். ஒரு வருடம் எடுத்துக் கொண்டாலும், இஸ்ரேல் தன் பணியை கண்டிப்பாக முடித்துவிடும்.

எல்லாவற்றையும் செய்யத் தயாராக இருக்கும் போராளிகள் இங்கு உள்ளனர். இந்த உறுதியானது இஸ்ரேலின் முழு மக்களின் எண்ணங்களை பிரதிபலிக்கிறது. இஸ்ரேலியப் படைகள் காசாவில் ஹமாஸ் பயங்கரவாதிகளுடன் கடும் சண்டையில் ஈடுபட்டுள்ளன. தெற்கு மற்றும் வடக்கில் இருந்து காசா நகரைத் தாக்கி நகர்ப்புறங்களுக்குள் நுழைந்துள்ளனர். இஸ்ரேல் ராணுவம் சுரங்கப்பாதைகளில் பயங்கரவாதிகளுடன் சண்டையிட்டு வருகிறது. மேலும் பதுங்கு குழிகள், சுரங்கங்கள் மற்றும் பலவற்றை அழித்து வருகிறது" என்று பாதுகாப்பு அமைச்சர் யோவ் கேலன்ட் கூறினார்.

# ஒரு முறை வீசினால் 3 லட்சம் பேர் உயிரிழக்கும் சக்தி வாய்ந்த அணு ஆயுத தயாரிப்பில் அமெரிக்கா



**நியூயார்க் : நவ. 6,**

**ரஷியாவுக்கு எதிராக ஒருவரும் அணு ஆயுதங்களை பயன்படுத்துவது பற்றி நினைக்க கூடாது என புதின் கூறினார்.**

அமெரிக்காவின் பாதுகாப்பு துறை சக்தி வாய்ந்த அணு ஆயுத தயாரிப்பில் ஈடுபட்டு உள்ளது. கடந்த 1945-ம் ஆண்டு ஜப்பானின் ஹிரோசிமா நகரில் வீசப்பட்ட அணுகுண்டை விட 24 மடங்கு சக்தி வாய்ந்த ஒன்றாக அது இருக்கும்.

1960-ம் ஆண்டு பனிப்போரின்போது, உருவாக்கப்பட்ட பி61 ரக குண்டுகளில் ஒரு வகையான இந்த அணுகுண்டு ஒரு முறை வீசப்பட்டால், 3 லட்சம் ரஷியர்கள் கொல்லப்படுவார்கள். எனினும், இந்த பி61-13 என்ற குண்டானது, பகைவர்களை அச்சமூட்டுவதற்காக உருவாக்கப்படுகிறது என அமெரிக்கா கூறுகிறது. தற்போது பயன்பாட்டில் உள்ள பி61-12 ரக குண்டை விட பெரிய ஒன்றாக ஆயுத கிடங்கில் அது சேர்க்கப்பட உள்ளது.

அமெரிக்க விண்வெளி கொள்கையின் பாதுகாப்பு துறைக்கான உதவி செயலாளர் ஜான் பிளம்ப் கூறும்போது, எதிரிகளை தடுக்கும் வகையில் நம்பக தன்மை கொண்ட திறன்களை தொடர்ந்து ஆய்வு செய்து, அவற்றை செயல்படுத்துவதற்கான பொறுப்பு எங்களுக்கு உள்ளது. தேவைப்பட்டால், தாக்குதல்களை எதிர்கொள்ளவும் மற்றும் கூட்டணி நாடுகளுக்கு உதவ வேண்டிய பொறுப்பும் உள்ளது என கூறியுள்ளார்.

இந்த ரக குண்டு வெடித்ததும், ஒரு மைல் தொலைவில் உள்ள அனைவரையும் கொல்வதுடன், கட்டிடங்களும் அழிந்து விடும். ஒரு மாதத்தில், 2 மைல்கள் சுற்றுப்பகுதியில் உள்ள நபர்கள் உயிரிழந்து விடுவார்கள். அந்த அளவுக்கு கதிரியக்க வெளிப்படுதல் இருக்கும். இவற்றில் தப்பி பிழைப்பவர்களில் 15 சதவீதத்தினர் கொடிய நோய் தாக்குதலால் பிற்காலத்தில் உயிரிழக்க கூடும். மொத்தம் 8.6 லட்சம் பேருக்கு காயமேற்படும் என அதுபற்றிய அறிக்கை தெரிவிக்கின்றது.

உக்ரைனுக்கு எதிரான ரஷியாவின் போரானது ஒன்றரை ஆண்டுகளாக நீடித்து வருகிறது. உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகள் செயல்பட்டு வருகின்றன. இதற்காக நிதி, ஆயுத உதவிகளையும் வழங்கி வருகின்றன. இந்த போரில், அணு ஆயுத பயன்பாட்டை பற்றி ரஷியா அடிக்கடி எச்சரித்து வருகிறது. விரிவான அணு ஆயுத பரிசோதனை தடைக்கான ஒப்பந்த நிராகரிப்பு பற்றி சமீபத்தில் ரஷிய அதிபர் புதின் பேசினார்.

அவர் பேசும்போது, அணு ஆயுத சோதனைகளை தொடங்கும்படி எனக்கு அழைப்புகள் வந்து கொண்டிருக்கின்றன. நாங்கள் உண்மையில் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டிய தேவை இருக்கிறதா? அல்லது இல்லையா? என்பது பற்றி கூற நான் தயாராக இல்லை என குறிப்பிட்டார். அமெரிக்கா மேற்கொள்ளாதவரை நாங்கள் பரிசோதனையை மீண்டும் தொடங்க போவதில்லை என கூறிய புதின், ரஷியாவுக்கு எதிராக ஒருவரும் அணு ஆயுதங்களை பயன்படுத்துவது பற்றி நினைக்க கூடாது என தொடர்ந்து கூறினார்.

அதுபோன்ற தாக்குதல் கண்டறியப்பட்டால், ஆயிரக்கணக்கான எங்களுடைய ராக்கெட்டுகள் வானில் பறந்து சென்று ஓர் எதிரி கூட தப்புவதற்கான வாய்ப்பை தராது என்றும் கூறினார்.

# ஒலிபரப்பின் போதே சுடப்பட்ட டிஜே தொடரும் பத்திரிக்கையாளர்கள் கொலைகள்



**பிலிப்பைன்ஸ் : நவ. 6,**

**பிலிப்பைன்ஸ் நாட்டின் பத்திரிக்கையாளராகவும், வானொலி ஒலிபரப்பாளராகவும் இருந்தவர் 57 வயதான ஜுவான்ஜுமாலோன். டிஜேவாக ஜுவன், "டிஜே ஜானிவாக்கர்" எனும் புனைப்பெயரில் புகழ் பெற்றிருந்தார்.**

ஜுவன், மிசாமிஸ் ஆக்ஸிடென்டல் பகுதியில் உள்ள கோல்ட் எஃப் எம் 94.7 எனும் வானொலி நிலையத்தில் பணியாற்றி வந்தார். நேற்று காலை சுமார் 0530 மணியளவில் வானொலி நிலையத்தில் உள்ள ஸ்டுடியோவில் நிகழ்ச்சியை ஒலிபரப்பி, டிஜேவாக நேயர்களின் கேள்விகளுக்கு பதிலளித்து கொண்டிருந்தார். அப்போது அந்த நிலையத்திற்கு இருவர் அவரை தேடி வந்தனர். இரும்பு கதவுகளை தள்ளி விட்டு கொண்டு உள்ளே நுழைந்த அவர்கள் ஜுவன் இருந்த ஒலிபரப்பு அறைக்குள் பலவந்தமாக நுழைந்தனர்.

அவர்களில் ஒருவன் மறைத்து வைத்திருந்த துப்பாக்கியை எடுத்து ஜுவனை ஒரு முறை சுட்டான்; மற்றொருவன் வேறு யாரும் வருகின்றனரா என பார்த்து கொண்டிருந்தான். அங்கிருந்து புறப்படும் போது அவன், ஜுவன் அணிந்திருந்த நெக்லெஸையும் கழட்டி கொண்டு சென்றான்.

அங்கிருந்து உடனடியாக ஜுவன் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார் அங்கு அவர் வரும் வழியிலேயே இறந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். இந்த சம்பவத்தின்போது, அங்கிருந்த கேமிராவில் பதிவான காட்சிகள் இணையத்தில் பரவி வருகிறது. அந்நாட்டு பத்திரிக்கையாளர்கள் சங்கம் இந்த கொலைக்கு கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்த கொலை சம்பவம் குறித்து வருத்தம் தெரிவித்த பிலிப்பைன்ஸ் அதிபர் பெர்டினண்டு மார்கோஸ் ஜூனியர், தீவிர விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார். 1986லிருந்து பிலிப்பைன்ஸ் நாட்டில் நடக்கும் 199-ஆவது பத்திரிக்கையாளர் கொலை இது என்பது குறிப்பிடத்தக்கது.

# காஸாவில் பெண்கள் படும் அவதிகள் நாப்கின் பற்றாக்குறையால் பரிதாபம்



**காஸா : நவ. 6,**

**இஸ்ரேல் - காஸா இடையே நடந்து வரும் போரின் காரணமாக காஸா நகரில் அனைத்து பொருட்களுக்குமே கடும் தட்டுப்பாடு நிலவி வருகிறது. இந்நிலையில் நாப்கின்கள் கிடைக்காததால் மாதவிடாய் கண்ட பெண்கள் துயரத்துக்கு ஆளாகி வருகிறார்கள்.**

இஸ்ரேல் தாக்குதல் கடுமையாக நடந்துவரும் நிலையில், காஸாவுக்கு உணவு, மருந்து உள்ளிட்ட நிவாரணப் பொருட்கள் சென்றடைவதில் தடைகள் இருப்பதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. ஐ.நா உட்பட சர்வதேச அமைப்புகள், நாடுகள் பலவும் இதற்கு கண்டனம் தெரிவித்து வருகின்றன.

இந்நிலையில் நிவாரணப் பொருட்கள் கிடைக்காததன் எதிரொலியாக, பாலஸ்தீனிய பெண்கள் பலரும் தங்கள் மாதவிடாய் காலத்தை தடுமாற்றத்தோடு எதிர்கொண்டு வருவதாக அதிர்ச்சி தகவல் வெளிவந்துள்ளது.

முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருப்பது, வெவ்வேறு இடங்களுக்கு மாற்றப்படுவது, பல நூறு பேருக்கு மத்தியில் இருப்பது, தண்ணீர் பற்றாக்குறை, நாப்கின் - டேம்பான்ஸ் - மென்சுரல் கப் போன்றவை கிடைப்பதில் பிரச்னை போன்ற காரணங்களினால் பெண்கள் தடுமாறி வருகின்றனர். அவர்களில் ஒரு சிலர் கைவசமிருந்த, மாதவிடாயை தள்ளிப்போடுவதற்கான மாத்திரைகள் மூலமாக தற்காலிகமாக சமாளித்து வருகிறார்கள்.

# பாகிஸ்தான் நாட்டின் கராச்சி நகரில் 70% இளைஞர்கள் விபத்துகளில் சிக்குகின்றனர் நிபுணர்கள் தகவல்




**கராச்சி : நவ. 6,**

**பாகிஸ்தானில் மோட்டார் வாகன ஓட்டிகள் பலரும் பயிற்சியை முறையாக பெறுவதோ, ஓட்டுநர் உரிமம் வைத்திருப்பதோ இல்லை என்றும் கூறியுள்ளார்.**

பாகிஸ்தான் நாட்டின் கராச்சி நகரில் அந்நாட்டின் ஆர்த்தோபீடிக் கூட்டமைப்பு சார்பில் 2 நாள் கருத்தரங்கம் நடந்தது. இதில் மருத்துவ நிபுணர்கள் மற்றும் மாணவர்கள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில், கராச்சி நகரில் தினமும் மோட்டார் வாகனங்களில் சென்று விபத்துகளில் சிக்கி அவசர சிகிச்சை பிரிவில் சேருபவர்களின் எண்ணிக்கை 500 ஆக உள்ளது என தெரிவிக்கப்பட்டு உள்ளது. அவர்களில் 70 சதவீதம் பேர் இளைஞர்கள். விபத்துகளில் சிக்குபவர்களுக்கு அதிக செலவிலான சிகிச்சை, அறுவை சிகிச்சைகள் தேவைப்படுகின்றன. அதன்பின்னர் தினமும் மருந்து எடுத்து கொள்ள வேண்டிய சூழலும் ஏற்படுகிறது.

இதனால், இளைஞர்களின் வாழ்க்கையே மாறி விடுகிறது என நிபுணர்கள் தெரிவித்தனர். இதுபற்றி அறுவை சிகிச்சை நிபுணர் மற்றும் பேராசிரியரான பத்ருதீன் சஹிதோ கூறும்போது, கராச்சி நகரை சேர்ந்த 500 பேர் வரை ஒவ்வொரு நாளும் சாலை போக்குவரத்து விபத்துகளில் சிக்குகின்றனர்.

இதில், காயமடைபவர்களை நோய் தாக்குதல்களுக்கு ஆளானவர்கள் என கருத்தில் கொள்வதில்லை. அதனால், பாகிஸ்தானில் சாலை விபத்துகளில் மக்கள் காயம் ஏற்படாத வகையில் தடுப்பு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என கூறியுள்ளார்.

போக்குவரத்து விதிகளை கடுமையாக பின்பற்றினால் இளைஞர்களுக்கும், அவர்களின் குடும்பத்தினருக்கும் எதிர்கால பாதிப்புகள் ஏற்படாமல் இருக்கும். கோடிக்கணக்கான மதிப்பிலான பணமும் மிச்சப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

நாட்டில் சாலை விதிகளை முறையாக பின்பற்றுவது அவசியம் என்று கூறிய சஹிதோ, மோட்டார் வாகன ஓட்டிகள் பலரும் பயிற்சியை முறையாக பெறுவதோ, ஓட்டுநர் உரிமம் வைத்திருப்பதோ இல்லை என்றும் கூறியுள்ளார்.

# இதெல்லாம் என்ன நாகரிகம் விமர்சிக்கப்படும் குரோஷிய அமைச்சரின் நடத்தை



**ஜெர்மனி : நவ. 6,**

**ஜெர்மனியின் தலைநகரமான பெர்லின் நகரில், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் அமைச்சர்களுக்கான சந்திப்பு நடைபெற்றது. அச்சந்திப்பில் பல ஐரோப்பிய நாடுகளின் வெளியுறவு துறை அமைச்சர்கள் கலந்து கொண்டனர்.**

65 வயதான குரோஷியா நாட்டை சேர்ந்த வெளியுறவு துறை அமைச்சர் கோர்டன் க்ரிலிக்-ராட்மேன் இச்சந்திப்பில் பங்கு பெற்றார். அப்போது அனைத்து அமைச்சர்களும் ஒன்றாக இணைந்து புகைப்படம் எடுத்து கொள்ளும் சம்பிரதாய நிகழ்வு நடைபெற்றது. ஜெர்மனியின் வெளியுறவு துறை அமைச்சர் அன்னாலினா பேர்பாக் அந்த நிகழ்வில் கலந்து கொண்டு அனைவருடன் குழுவில் நின்றார்.

அப்போது எதிர்பாராத விதமாக அன்னாலினா அருகில் நின்று கொண்டிருந்த ராட்மேன், அன்னாலினாவை கன்னத்தில் முத்தமிட முற்பட்டார். அன்னாலினா மென்மையாக ராட்மேனின் இந்த செய்கையை தவிர்த்தார். பலரையும் இந்த செயல் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இந்த சம்பவத்தின் வீடியோ இணையத்தில் பரவி பரபரப்பாக பேசப்பட்டது.

குரோஷியா நாட்டின் பெண்கள் உரிமை ஆர்வலர் ராடா போரிக், "நெருக்கங்களை அனுமதிக்கும் உறவுகளுக்கு இடையேதான் இது போன்ற செய்கைகளை வெளிப்படுத்த வேண்டும். இந்த இருவருக்கும் இது போன்ற உறவு இல்லை என்பது தெளிவாக தெரிகிறது. இந்த நிகழ்வு தவிர்க்கப்பட்டிருக்க வேண்டிய அநாகரீகமான செயல்" என விமர்சித்துள்ளார்.

முன்னாள் குரோஷியா நாட்டு பிரதமர் ஜட்ரன்கா கோஸோர், "வலுக்கட்டாயமாக பெண்களை முத்தமிடுவதும் வன்முறைதானே?" என தனது அதிகாரபூர்வ எக்ஸ் கணக்கில் ராட்மேனை விமர்சித்து கேள்வி எழுப்பியுள்ளார்.

ஆனால், இது குறித்து ராட்மேன் கருத்து தெரிவிக்கும் போது, "இதில் என்ன பிரச்சனை என எனக்கு தெரியவில்லை. ஒரு சக பணியாளரை சந்தித்த மகிழ்ச்சியை மனிதாபமான அணுகுமுறையில் வெளிப்படுத்தினேன். இந்த சந்திப்பின் போது இவ்வாறு நடந்து கொண்டது பொருத்தமற்ற தருணமாக சிலருக்கு தோன்றலாம். அவ்வாறு நினைப்பவர்களிடம் மன்னிப்பு கோருகிறேன்" என தெரிவித்தார். தற்போது வரை இது குறித்து அன்னாலினா எந்த கருத்து தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# காசா பொதுமக்கள் வெளியேற 4 மணி நேரம் அவகாசம் விதித்த இஸ்ரேல்



**காசா : நவ. 6,**

**பாலஸ்தீனத்தின் காசா முனை பகுதி மீது இஸ்ரேலின் போர் தாக்குதல் நேற்று 30-வது நாளாக நீடித்து வருகிறது.**

காசாவை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினரை அழிப்பதாக சூளுரைத்துள்ள இஸ்ரேல் காசா மீது வான், கடல், தரை என மும்முனை தாக்குதல் நடத்துகிறது. இதில் ஏராளமான குடியிருப்பு கட்டிடங்கள் இடிந்து தரைமட்டமாகின. குழந்தைகள், பெண்கள் உள்பட 9,500-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

சமீபத்தில் காசாவில் உள்ள மிகப்பெரிய ஜபாலியா அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் 195 பேர் பலியானார்கள். ஹமாஸ் அமைப்பு முக்கிய தளபதியை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்தது.

இந்த தாக்குதலுக்கு ஐ.நா. மற்றும் எகிப்து, சவுதி அரேபியா உள்ளிட்ட நாடுகள் கண்டனம் தெரிவித்தன. இந்நிலையில், காசாவில் அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் மீண்டும் தாக்குதல் நடத்தி உள்ளது. மத்திய காசாவில் உள்ள அல்-மகாசி அகதிகள் முகாம் மீது நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்தியது. முகாம் மீது குண்டுகள் வீசப்பட்டதில் அங்கிருந்த கட்டிடங்கள் இடிந்து விழுந்தன.

இந்த தாக்குதலில் அகதிகள் முகாமில் இருந்து 30-க்கும் மேற்பட்டோர் பலியானார்கள். ஏராளமானோர் காயம் அடைந்தனர். அவர்களை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர். இதற்கிடையே அல்-மகாசி அகதிகள் மீதான இஸ்ரேல் தாக்குதலில் 51 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர் என்றும், பெரும்பாலும் பெண்கள், குழந்தைகள் உயிரிழந்தனர் என்றும் பாலஸ்தீனிய செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. இத்தாக்குதலில் 2 குடியிருப்புகள் இடிந்து விழுந்ததாகவும் தெரிவித்தது.

இதுதொடர்பாக ஹமாஸ் அமைப்பு வெளியிட்ட அறிக்கையில், பாலஸ்தீனிய மக்கள் வீடுகள் மீது இஸ்ரேல் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியது. இதில் பலியானவர்களில் பெரும்பாலானோர் பெண்கள், குழந்தைகள் ஆவார்கள் என்று தெரிவித்துள்ளது.

காசா பகுதி முழுவதும் இஸ்ரேல் தீவிர தாக்குதலை நடத்தி வருகிறது. வடக்கு காசாவுக்குள் புகுந்துள்ள இஸ்ரேல் தரைப்படை, காசா சிட்டியை சுற்றிவளைத்து முன்னேறி வருகிறது. அவர்களுடன் ஹமாஸ் அமைப்பினர் சண்டையிட்டு வருகிறார்கள். இருதரப்பினர் இடையே கடும் மோதல் நடந்து வருகிறது. வடக்கு காசாவில் தொடர்ந்து குண்டு வீசப்பட்டு வருகின்றன. இதனால் பொதுமக்கள் பலர் அங்கிருந்து தப்ப முடியாமல் தவித்து வருகிறார்கள்.

இஸ்ரேல் போர் விதியை மீறி பொதுமக்கள் வசிக்கும் பகுதி, பள்ளி, மருத்துவமனைகள், வழிபாட்டு தலங்கள் மீது தாக்குதல் நடத்தி வருகிறது என்று பாலஸ்தீனம் குற்றம் சாட்டியுள்ளது. ஆனால் அங்கு ஹமாஸ் அமைப்பினர் பதுங்கி இருப்பதாக கூறி இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. பலியானவர்கள் உடல்கள் மற்றும் காயம் அடைந்தவர்களின் எண்ணிக்கை மருத்துவமனைகளில் அதிகரித்து வருவதாக காசாவின் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், காசாவில் உள்ள பொதுமக்கள் வெளியேற 4 மணி நேரம் அவகாசம் வழங்கப்படுகிறது என்று இஸ்ரேல் பாதுகாப்பு படை அறிவித்துள்ளது. உள்ளூர் நேரப்படி நேற்று காலை 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை சலா அல்-தீன் தெருவை காசாவில் உள்ள மக்கள் வெளியேற்றுவதற்கான பாதையாக பயன்படுத்தலாம். அங்கு 4 மணி நேரம் தாக்குதல் நடத்தப்படாது பொதுமக்கள் தெற்கு நோக்கிச் செல்லுங்கள் என்று இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

# ஜெர்மனியில் காரில் ஆயுதத்துடன் விமான நிலையத்திற்குள் புகுந்த மர்ம நபர்



**பெர்லின் : நவ. 6,**

**காரில் இருந்து, எரிந்து கொண்டிருந்த 2 பாட்டில்களை எடுத்து, அந்நபர் தூக்கி வீசியுள்ளார்.**


ஜெர்மனியின் ஹேம்பர்க் நகரில் உள்ள விமான நிலையத்தில் மர்ம நபர் ஒருவர் திடீரென காரில் வந்துள்ளார். கையில் துப்பாக்கியுடன் காணப்பட்ட அவர், வானை நோக்கி 2 முறை சுட்டார். காரில் இருந்து, எரிந்து கொண்டிருந்த 2 பாட்டில்களையும் எடுத்து, தூக்கி வீசியுள்ளார்.

இதனால், பயணிகள், அவர்களின் உறவினர்கள் என அந்த பகுதியில் இருந்தவர்கள் அலறியடித்து ஓடினர். இதுபற்றி தகவல் அறிந்ததும், போலீசார் சம்பவ பகுதிக்கு உடனடியாக சென்றனர். இதில், பாதுகாப்பு பகுதியை உடைத்து கொண்டு அந்த வாகனம் சென்றதும், காரில் 2 குழந்தைகள் இருந்ததும் தெரிய வந்துள்ளது.

இதனை தொடர்ந்து, விமான சேவை நிறுத்தப்பட்டதுடன், அனைத்து முனையங்களிலும் உள்ள நுழைவு வாயில்கள் அடைக்கப்பட்டன. பாதிக்கப்பட்ட பயணிகள் அனைவரும் விமான நிறுவனங்களை நேரடியாக தொடர்பு கொள்ளும்படி, விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனினும், இந்த துப்பாக்கி சூட்டில் ஒருவரும் காயம் அடையவில்லை என போலீசார் தெரிவித்தனர். துப்பாக்கி சூடு நடத்துவதற்கு முன் அவருடைய மனைவி போலீசை தொடர்பு கொண்டு, அந்த நபர் 2 குழந்தைகளையும் கடத்தி கொண்டு செல்கிறார் என தெரிவித்தது தெரிய வந்துள்ளது. தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது.

# பாகிஸ்தான் விமானப்படை தளம் மீது தாக்குதல் நடத்திய 9 தீவிரவாதிகள் சுட்டுக் கொலை



**மியான்வாலி : நவ. 6,**

**பாகிஸ்தானின் பஞ்சாப் பகுதியில் மியான்வாலி என்ற இடத்தில் உள்ள விமானப் படை பயிற்சி மையத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை 9 தீவிரவாதிகள் புகுந்து தாக்குதல் நடத்தினர். இதில் 3 விமானங்கள் சேதம் அடைந்தன.**

இதையடுத்து விமானப்படை தளத்தில் பாகிஸ்தான் ராணுவத்தினர் தேடுல் வேட்டை நடத்தி 9 தீவிரவாதிகளை சுட்டுக் கொன்றனர். தீவிரவாத தாக்குதலில் சேதம் அடைந்த 3 விமானங்களும், பயன்பாட்டில் இல்லாத பழைய விமானங்கள் எனவும், பயன்பாட்டில் உள்ள விமானப்படை விமானங்கள் எதுவும் சேதம் அடையவில்லை எனவும் பாகிஸ்தான் ராணுவம் கூறியுள்ளது.

இந்த தாக்குதலுக்கு தெக்ரீக்-இ-தலிபான் பாகிஸ்தான் என்ற தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. இந்த தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ள பொறுப்பு பிரதமர் அன்வருள் ஹக் காகர், "பாதுகாப்பு படையினர் மீது தாக்குதல் நடத்தும் முயற்சி முறியடிக்கப்படும்" என தெரிவித்தார். பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் சர்பரஸ் புக்தி கூறுகையில், "பாகிஸ்தானை நிலைகுலையச் செய்ய நடைபெறும் சதிதான் இந்த தீவிரவாத தாக்குதல்" என்றார்.

பாகிஸ்தானில் இந்தாண்டின் முதல் 9 மாதங்களில் நடைபெற்ற தீவிரவாத தாக்குதல்களில் பாகிஸ்தான் வீரர்கள் 386 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், வன்முறையின் மையமாக பலுசிஸ்தான் இருக்கிறது எனவும் பாகிஸ்தானில் உள்ள பாதுகாப்பு படிப்புகள் ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.




# சென்னையில் வாகனங்களுக்கான வேக வரம்பை மீறியதாக ஒரே நாளில் 120 வழக்குகள் பதிவு : காவல்துறை தகவல்

சென்னை, நவ. 6–

சென்னையில் அமல்படுத்தப்பட்டுள்ள வாகனங்களுக்கான வேக வரம்புகளை மீறியதாக நேற்று முன்தினம் சனிக்கிழமை மட்டும் 120 பேர் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக, போக்குவரத்து காவல் கூடுதல் ஆணையர் சுதாகர் தெரிவித்துள்ளார்.



சென்னையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை முதல் நடைமுறைக்கு வந்துள்ள வேகவரம்பு கட்டுப்பாடு குறித்து போக்குவரத்து காவல் கூடுதல் ஆணையர் சுதாகர் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியது: "சென்னையில் வாகனங்களுக்கான வேக கட்டுப்பாட்டை நிர்ணயிக்க, ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்த குழு, பாதுகாப்பு அதேசமயம் வேகமாக பயணிப்பது குறித்து ஆய்வு செய்து பரிந்துரைகளை வழங்கியது.

அந்தப் பரிந்துரைகள், போக்குவரத்து ஆணையருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்தப் பரிந்துரை ஏற்றுக்கொள்ளப்பட்டு, நவ.1ம் தேதி பத்திரிகை செய்தி வெளியிடப்பட்டு, சனிக்கிழமை முதல் அமலுக்கு வந்தது. அதன்படி, புதிய வேக வரம்பு கட்டுப்பாடு, இலகுரக மோட்டார் வாகனங்களுக்கான வேக வரம்பு 40 கி.மீட்டரிலிருந்து 60 கி.மீட்டராக மாற்றப்பட்டுள்ளது. கனரக வாகனங்களுக்கான வேக வரம்பு 30 கி.மீட்டரிலிருந்து 50 கி.மீட்டராக மாற்றப்பட்டுள்ளது.

இருசக்கர வாகனங்களுக்கு 50 கி.மீ, ஆட்டோக்களுக்கு 40 கி.மீ, என வேக வரம்பு நிர்ணயிக்கப்பட்டது. சிறிய வீதிகளைக் கொண்ட குடியிருப்புப் பகுதிகளுக்கு 30 கி.மீ என வேக வரம்பு நிர்ணயிக்கப்பட்டு, சனிக்கிழமை முதல் பெருநகர சென்னை காவல்துறைக்குட்பட்ட பகுதிகளில் இந்த வேக வரம்பு கட்டுப்பாடு அமலுக்கு வந்துள்ளது. சென்னை மட்டுமல்ல, டெல்லி, கொல்கத்தா, பெங்களூரு உள்ளிட்ட நகரங்களின் வேக கட்டுப்பாடு வரம்பு என்ன? அவர்கள் நிர்ணயித்துள்ள வேகவரம்பு குறித்து ஆய்வு செய்தோம். எங்களது குழுவுடன், ஐஐடி குழுவும் இணைந்து இந்த ஆய்வை மேற்கொண்டு வேக வரம்பு நிர்ணயிக்கப்பட்டு, அமல்படுத்தப்பட்டுள்ளது.

சனிக்கிழமை மட்டும் வேக வரம்பு கட்டுப்பாட்டை மீறி வாகனம் ஓட்டியதாக 120 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான நவீன கேமராக்கள் கொண்டு கண்காணிக்கப்பட்டது. அதில் அதிவேகமாக செல்பவர்கள் ரேடார் மூலம் கண்டறியப்படுகின்றனர். அதற்கான வசதிகள் நம்மிடம் உள்ளன. பொதுமக்கள் பாதுகாப்பான பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான், இந்த வேக வரம்பு கட்டுப்பாடு கொண்டு வரப்பட்டுள்ளது. எனவே, இந்த கட்டுப்பாடுகளை பொதுமக்கள் முறையாக கடைபிடிக்க வேண்டும்" என்று அவர் கூறினார்.

*2024 தேர்தலில்*

# எல்லா தடைகளையும் உடைத்து மக்கள் பாஜகவை ஆதரிப்பர் – பிரதமர் மோடி

புதுடெல்லி, நவ. 6–

2024 தேர்தலில் எல்லா தடைகளையும் உடைத்து மக்கள் பாஜகவை ஆதரிப்பார்கள் என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். முன்னதாக நேற்று முன்தினம் சனிக்கிழமை அவர் தனியார் ஊடகம் ஒருங்கிணைத்த மாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.



அந்நிகழ்ச்சியில் அவர் பேசுகையில், ”இந்தியா எல்லாத் தடைகளையும் உடைத்துவிட்டது. உண்மையிலேயே இருந்த தடைகளும், ஊதிப் பெரிதுபடுத்தப்பட்ட தடைகளும் கடந்த 10 ஆண்டுகளில் தகர்க்கப்பட்டுவிட்டன. இப்போது தேசம் 2047-ல் வளர்ந்த நாடாக உருவாகும் பாதையில் சென்று கொண்டிருக்கிறது. வாரிசு அரசியலும் குடும்ப அரசியலும் தான் நாட்டின் வளர்ச்சிக்கு உண்மையான தடைகளாக இருந்தன. ஆனால் பாஜக அரசு அதனை முடிவுக்குக் கொண்டுவந்தது. இப்போது சாமானியர்கள் தங்களிடம் கூடுதல் அதிகாரம் இருப்பதாக உணர்கிறார்கள்.

வறுமை ஒழிப்பில் பாஜக அரசு சிறப்பாக செயல்பட்டுள்ளது. அரசின் கொள்கைகளால் நடுத்தர வர்க்கம் அதிகரித்துள்ளது. மாத வருமானம் பெறுவோரின் வருவாய் அதிகரித்துள்ளது.

இன்று இந்தியா நிலவில் வரலாற்று சிறப்புமிக்கு தடத்தைப் பதித்துள்ளது. ஜி20 உச்சி மாநாட்டை நடத்தியுள்ளது. செல்போன் ஏற்றுமதியிலும், டிஜிட்டல் பணப் பரிவர்த்தனையிலும் மிளிர்கிறது. நாட்டில் வருமான வரி செலுத்துவோரின் எண்ணிக்கை 2023ல் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட இருமடங்காக அதிகரித்துள்ளது. அன்றாடம் அமைக்கப்படும் தேசிய நெடுஞ்சாலை தூரத்தின் அளவு 12 கிலோ மீட்டரில் இருந்து 30 கிலோ மீட்டராக அதிகரித்துள்ளது. செயல்பாட்டில் உள்ள விமான நிலையங்களின் எண்ணிக்கை 70ல் இருந்து 150 ஆக அதிகரித்துள்ளது. 2014 வரை நாட்டில் இருந்த ரயில் இருப்புப் பாதையின் தூரம் வெறும் 20 ஆயிரம் கிலோமீட்டர். இப்போது அது 40 ஆயிரம் கிலோமீட்டராக அதிகரித்துள்ளது.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்துக்கான சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்டதால் அங்கு பயங்கரவாதம் அழிந்து சுற்றுலா மேம்பட்டு வருகிறது. ஆகையால், 2024 தேர்தலில் எல்லா தடைகளையும் உடைத்து மக்கள் பாஜகவை ஆதரிப்பர் என்று பிரதமர் மோடி பேசினார்.

# அறந்தாங்கி அருகே கொடிவயலில் திமுக இளைஞரணி மாநில மாநாட்டை முன்னிட்டு மாட்டு வண்டி பந்தயம்

## அமைச்சர் மெய்யநாதன் தொடங்கி வைத்தார்



அறந்தாங்கி, நவ. 6–

டிசம்பர் 17 ம் தேதி நடைபெற உள்ள திமுக இளைஞர் அணி மாநில மாநாட்டை முன்னிட்டு மாபெரும் மாட்டுவண்டி எல்கை பந்தயம் நடைபெற்றது, இதனை சுற்றுச்சூழல்த்துறை அமைச்சர் மெய்யநாதன் கொடியசைத்து தொடங்கி வைத்தார்

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே கொடிவயல் ஊராட்சிசார்பில் டிசம்பர் -17ம் தேதி இளைஞரணி மாநில மாநாட்டை முன்னிட்டு திமுக இளைஞரணி சார்பில் மாபெரும் மாட்டுவண்டி பந்தயம் நடைபெற்றது, நிகழ்ச்சியினை தமிழக சுற்றுச்சூழல் துறை அமைச்சர் மெய்யநாதன் தொடங்கி வைத்தார்.

சின்னமாடு, 4 பல்கன்று என இரு பிரிவுகளாக நடைபெற்ற போட்டியில் புதுக்கோட்டை, தஞ்சை திருச்சி, தேனி, மதுரை சிவகங்கை, ராமநாதபுரம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து கொண்டுவரப்பட்ட மாட்டுவண்டிகள் போட்டியில் கலந்து கொண்டன போட்டியில் கலந்து கொண்ட இரட்டைமாட்டு வண்டிகள் நிர்ணயிக்கப்பட்ட பந்தய இலக்கினை நோக்கி சீறிப்பாய்ந்தன போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்றமாட்டின் உரிமையாளர்களுக்கு ஒரு லட்சரூபாய் ரொக்கப்பரிசும் கோப்பைகளும் வழங்கப்பட்டன. விழாவிற்கு வருகை தந்த சுற்றுச்சூழல் துறை அமைச்சருக்கு மலர் தூவி மேள தாளங்களுடன் இளைஞரணி சார்பாக உற்சாக வரவேற்பு கொடுத்தனர்.

பந்தய நிகழ்ச்சியில் அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியகுழுத்தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன் அறந்தாங்கி கிழக்கு ஒன்றிய செயலாளர் குமார், தெற்கு ஒன்றிய செயலாளர் பொன். கணேசன் மாவட்ட ஊராட்சிகுழு உறுப்பினர் சரிதாமேகராஜன், ஒன்றியக்குழு உறுப்பினர் அருள்நம்பி, ஊராட்சிமன்ற தலைவர் வெண்ணிலா பாலமுருகன், மாவட்ட இலக்கிய அணி செல்வராஜ், இளைஞர் அணி துணை அமைப்பாளர் செந்தில் வழக்கறிஞர்கள் திருமுருகன், தமிழ்வாணன், கதிரேசன் மற்றும் திமுக நிர்வாகிகள் அப்பகுதி பொதுமக்கள் பந்தய ரசிகர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




PUDUGAI VARALARU – National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# ஐபிஎல் தொடரில் ரூ.41,500 கோடி முதலீடு செய்ய சவுதி அரேபியா விருப்பம்




**புதுடெல்லி : நவ. 6,**

**கால்பந்து, கோல்ஃப் உள்ளிட்ட தொழில்முறை விளையாட்டுகளில் சவுதி அரேபியா தொடர்ந்து முதலீட்டை அதிகரித்து வருகிறது. அதற்கு கிடைத்த வரவேற்பினைத் தொடர்ந்து தற்போது கிரிக்கெட்டில் அதிகம் லாபம் ஈட்டும் தொடரான ஐபிஎல் பக்கம் சவுதி அரேபியாவின் கவனம் திரும்பியுள்ளது.**

அதன் அடிப்படையில் சவுதி இளவரசர் முகமது பின் சல்மானின் ஆலோசகர்கள் ஐபிஎல்லை 30 பில்லியன் டாலர் மதிப்புள்ள ஹோல்டிங் நிறுவனமாக மாற்றுவது குறித்து இந்திய அரசு அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். கடந்த செப்டம்பரில் சவுதி இளவரசர் இந்தியாவுக்கு வந்தபோது இதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

அப்போது நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின்படி, இங்கிலீஷ் பிரிமீயர் லீக் அல்லது யூரோப்பியன் சாம்பியன் லீக்கைப் போலவே ஐபிஎல் லீக்கிலும் 5 பில்லியன் டாலரை அதாவது ரூ.41,500 கோடியை முதலீடு செய்ய சவுதி அரேபியா சார்பில் விருப்பம் தெரிவிக்கப்பட்டது. இது, இந்தப் போட்டிகளை பிற நாடுகளுக்கும் விரிவாக்கம் செய்ய உதவும் என்று கூறப்பட்டுள்ளது. ஐபிஎல் முதலீட்டு ஒப்பந்தத்தை செயல்படுத்துவதற்கு தேவையான அழுத்தத்தை கொடுக்க சவுதி ஆர்வமாக உள்ள நிலையில் பிசிசிஐயும் அடுத்த ஆண்டு இந்த முன்மொழிவுக்கு அழைப்பு விடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# சுல்தான் ஜோஹர் கோப்பை ஹாக்கியில் இந்தியாவுக்கு வெண்கலப் பதக்கம்



**கோலாலம்பூர் : நவ. 6,**

**சுல்தான் ஜோஹர் கோப்பை ஹாக்கி தொடரில் இந்திய ஜூனியர் அணி பெனால்டி ஷூட் அவுட்டில் 6-5 என்ற கோல் கணக்கில் பாகிஸ்தான் அணியை வீழ்த்தி வெண்கலப் பதக்கம் வென்றது.**

மலேசியாவின் ஜோகூர் பாரு நகரில் நடைபெற்று வந்த சுல்தான் ஜோஹர் கோப்பை ஹாக்கி தொடரில் 3-வது இடத்துக்கான ஆட்டத்தில் இந்திய ஜூனியர் அணி, பாகிஸ்தானை எதிர்த்து விளையாடியது. இந்த ஆட்டம் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் 3-3 என்ற கோல் கணக்கில் டிராவில் முடிவடைந்தது. இந்திய அணி சார்பில் அருண் ஷஹானி 11-வது நிமிடத்திலும், 42-வது நிமிடத்தில் பூவன்னாவும், 52-வது நிமிடத்தில் உத்தம் சிங்கும் கோல் அடித்தனர். பாகிஸ்தான் அணி தரப்பில் சுஃப்யான் கான் (33-வது நிமிடம்), அப்துல் கயூம் (50-வது நிமிடம்), ஷாஹித் ஹன்னன் (57-வது நிமிடம்) ஆகியோர் கோல் அடித்தனர்.

இதையடுத்து வெற்றியை தீர்மானிக்க பெனால்டி ஷூட் அவுட் கடைபிடிக்கப்பட்டது. இதில் 5 வாய்ப்பில் இரு அணிகள் தரப்பிலும் தலா 4 கோல்கள் அடிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து 'சடன்டெத்' விதி முறை கடைபிடிக்கப்பட்டது. இதில் இந்திய அணி தரப்பில் விஷ்ணுகாந்த் சிங், அங்கத் பிர் சிங் ஆகியோர் கோல் அடித்தனர். பாகிஸ்தான் அணி தரப்பில் அர்ஷத் லியாகத் கோல் அடித்தார். அந்த அணியின் கேப்டன் ஷாஹித் ஹன்னனின் கோல் அடிக்கும் முயற்சியை இந்திய அணியின் கோல் கீப்பர் மோஹித் அற்புதமாக தடுத்தார். இதனால் இந்திய அணி 6-5 என்ற கோல் கணக்கில் பாகிஸ்தான் அணியை வீழ்த்தி வெண்கலப் பதக்கம் வென்றது.

# ஹர்திக் பாண்டியாவுக்கு பதில், பிரசித் கிருஷ்ணா தேர்வு ஏன்

## ராகுல் டிராவிட் பேட்டி





**கொல்கத்தா : நவ. 6,**

**உலக கோப்பை கிரிக்கெட் போட்டி குறித்து இந்திய அணியின் தலைமை பயிற்சியாளர் ராகுல் டிராவிட் அளித்தபேட்டி : ஹர்திக் பாண்டியா விலகியதால் தற்போது எங்களிடம் தரமான 6வது பவுலர் இல்லை. ஆனால் எங்களிடம் இன்ஸ்விங்கர் பந்துகளை வீசி அச்சுறுத்தலை கொடுக்கக் கூடிய விராட் கோஹ்லி இருக்கிறார்.**

அவரை ஓரிரு ஓவர்களுக்கு நாங்கள் பயன்படுத்தலாம். கடந்த போட்டியில் கூட ரசிகர்கள் தொடர்ந்து கூச்சலிட்டு கேட்டுக் கொண்டதால் அவர் பந்து வீசுவதற்கு நெருக்கமாக இருந்தார். எனவே அணி மற்றும் வீரர்களின் பதில் சிறப்பாக உள்ளது. கோஹ்லி தனது சதத்தை பற்றி கவலைப்படவில்லை இந்தியாவுக்கு தொடர்ந்து வழக்கம் போல விளையாடுவதற்கு ரிலாக்ஸாக இருக்கிறார். ஹர்திக் காயம் அடைந்த பிறகு நாங்கள் மூன்று வேகப்பந்துவீச்சாளர்களை வைத்து விளையாடினோம். எங்களிடம் சுழற்பந்துவீச்சாளருக்கும் ஆல்ரவுண்டருக்கும் மாற்று வீரர்கள் இருக்கிறார்கள். ஆனால் எங்களுக்கு ஒரு வேகப்பந்துவீச்சாளருக்கு மாற்று வீரர் தேவைப்படுகிறது. எனவே இதன் காரணமாக பிரசித் கிருஷ்ணா அணியில் சேர்க்கப்பட்டு இருக்கிறார்.

எங்களுடைய வேகப்பந்துவீச்சாளர்கள் அற்புதமாக செயல்பட்டு விக்கெட் எடுக்கிறார்கள். இதனால் ஜடேஜா, குல்தீப் ஆகியோரின் செயல்பாடுகள் ரசிகர்களால் கண்டுகொள்ளாமல் செல்லப்படுகிறது. ஜடேஜா போன்ற வீரர் பனிப்பொழிவால் பந்து ஈரமாக இருந்தாலும் அதனை பெரிதுபடுத்தாமல் செயல்படுகிறார்கள். எங்களுக்கு நடு ஓவர்களில் தேவையான விக்கெட்டையும் எதிரணியின் ரன் குவிக்கும் வேகத்தையும் ஜடேஜா குறைக்கிறார். பேட்டிங் வரிசையில் ஆறாவது மற்றும் ஏழாவது இடத்தில் விளையாடும் வீரர்களுக்கு எப்போதாவது தான் அந்த வாய்ப்பு கிடைக்கும். அப்படி வாய்ப்பு வரும்போது எல்லாம் ஜடேஜா எங்கள் அணிக்காக பல முக்கிய ஆட்டத்தை விளையாடி இருக்கிறார். அவருடைய பில்டிங் எப்போதும் போல் பிரமாதமாக இருக்கிறது. ஒரு வீரராக ஜடேஜா அனைத்தையும் எங்களுக்கு தருகிறார்.

# நியூஸிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் 'விதி'யால் வென்றது பாகிஸ்தான் அணி



**பெங்களூரு : நவ. 6,**

**ஐசிசி ஒருநாள் கிரிக்கெட் உலகக் கோப்பை தொடரில் மழையால் பாதிக்கப்பட்ட நியூஸிலாந்துக்கு அணிக்கு எதிரான ஆட்டத்தில் டக்வொர்த் லீவிஸ் விதிப்படி 21 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது பாகிஸ்தான் அணி.**

பெங்களூரு சின்னசாமி மைதானத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் பேட் செய்த நியூஸிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 401 ரன்கள் குவித்தது. தனது 3-வது சதத்தை விளாசிய தொடக்க வீரரான ரச்சின் ரவீந்திரா 94 பந்துகளில், ஒரு சிக்ஸர், 15 பவுண்டரிகளுடன் 108 ரன்கள் விளாசிய நிலையில் மொகமது வாசிம் பந்தில் ஆட்டமிழந்தார். கேப்டன் கேன் வில்லியம்சன் 79 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 10 பவுண்டரிகளுடன் 95 ரன்கள் எடுத்த நிலையில் இப்திகார் அகமது பந்தில் வெளியேறினார். 2-வது விக்கெட்டுக்கு இந்த ஜோடி 180 ரன்கள் சேர்த்தது.

டேவன் கான்வே 35, டேரில் மிட்செல் 29, மார்க்சாப்மேன் 39, கிளென் பிலிப்ஸ் 41 ரன்களில் ஆட்டமிழந்தனர். பாகிஸ்தான் அணி சார்பில் மொகமதுவாசிம் 3 விக்கெட்கள் வீழ்த்தினார். ஹசன் அலி, இப்திகார் அகமது, ஹரிஸ் ரவூஃப் ஆகியோர் தலா ஒரு விக்கெட் கைப்பற்றினர். 402 ரன்கள் இலக்குடன் பேட் செய்த பாகிஸ்தான் அணிக்கு தொடக்கம் சற்று அதிர்ச்சியாக இருந்தது. அப்துல்லா ஷபிக் 4 ரன்களில் டிம் சவுதி பந்தில் ஆட்டமிழந்தார்.

இதன் பின்னர் கேப்டன் பாபர் அஸம் களமிறங்க பஹர் ஸமான், நியூஸிலாந்து அணியின் பந்து வீச்சை வெளுத்து வாங்கினார். மழை இடையூறு இருக்கக்கூடும் என கணித்து விளையாடிய பாகிஸ்தான் அணி ரன் ரேட்டில் அதிக கவனம் செலுத்தியது. மட்டையை சுழற்றிய பஹர் ஸமான் 63 பந்துகளில், 9 சிக்ஸர்கள், 4 பவுண்டரிகளுடன் சதம் விளாசினார். இது அவருக்கு 11-வது சதமாக அமைந்தது.

பாகிஸ்தான் அணி 21.3 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 160 ரன்கள் எடுத்திருந்த நிலையில் மழை காரணமாக ஆட்டம் நிறுத்தப்பட்டது. அப்போது டக்வொர்த் லீவிஸ் விதிப்படி 10 ரன்கள் அதிகமாகவே பாகிஸ்தான் அணி எடுத்திருந்தது. பஹர் ஸமான் 106, பாபர் அஸம் 47 ரன்களுடன் களத்தில் இருந்தனர்.

மழை நின்ற பின்னர் ஆட்டம் தொடங்கப்பட்ட நிலையில் பாகிஸ்தான் அணிக்கு இலக்கு மாற்றி அமைக்கப்பட்டது. 41 ஓவர்களில் 342 ரன்கள் எடுக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டது. பேட்டிங்கை தொடர்ந்த பாபர் அஸம் விரைவாக ரன்கள் சேர்த்தார். 52 பந்துகளில், ஒரு சிக்ஸர், 5பவுண்டரிகளுடன் தனது 32-வது அரை சதத்தைகடந்தார். பாகிஸ்தான் அணி 25.3 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 200 ரன்கள் சேர்த்திருந்த போது மீண்டும் மழை குறுக்கிட்டது.

அப்போது பஹர் ஸமான் 81 பந்துகளில், 11 சிக்ஸர்கள், 8 பவுண்டரிகளுடன் 126 ரன்களும், பாபர் அஸம் 63 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 6 பவுண்டரிகளுடன் 66 ரன்களும் சேர்த்து களத்தில் இருந்தனர். கன மழை பெய்ததை அடுத்து போட்டியை தொடர்ந்து நடத்த முடியாத நிலை ஏற்பட்டது. இதையடுத்து வெற்றியாளரை தீர்மானிக்க டக்வொர்த் லீவிஸ் முறை கடைபிடிக்கப்பட்டது. இதன்படி பாகிஸ்தான் அணி 21 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

பாகிஸ்தான் அணிக்கு இது 4-வது வெற்றியாக அமைந்தது. 8 ஆட்டங்களில் 4 வெற்றி, 4 தோல்விகளுடன் 8 புள்ளிகள் பெற்றுள்ள பாகிஸ்தான் அணி பட்டியலில் 5-வது இடத்துக்கு முன்னேறியதுடன் அரை இறுதிக்கு முன்னேறுவதற்கான வாய்ப்பை உயிர்ப்பிக்கச் செய்துள்ளது. அந்த அணி தனது கடைசி லீக் ஆட்டத்தில் வரும் 11-ம் தேதி இங்கிலாந்துடன் கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் மோதுகிறது.

நியூஸிலாந்து அணி தொடர்ச்சியாக 4-வது தோல்வியை சந்தித்துள்ளது. 8 ஆட்டங்களில் விளையாடி உள்ள அந்த அணி 4 வெற்றி, 4 தோல்விகளுடன் 8 புள்ளிகளுடன் 4-வது இடத்தில் தொடர்கிறது. நியூஸிலாந்து அணி தனது கடைசி லீக் ஆட்டத்தில் வரும் 9-ம் தேதி இலங்கை அணியுடன் மோதுகிறது. இந்த ஆட்டம் பெங்களூருவில் நடைபெறுகிறது. இதில் அதிக ரன் ரேட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றால் மட்டுமே நியூஸிலாந்து அணி அரை இறுதிக்கு முன்னேறுவதற்கான வாய்ப்பு கிடைக்கும் என்ற நெருக்கடியான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் அணிக்கு எதிரான ஆட்டத்தில் நியூஸிலாந்து அணி தோல்வி அடைந்ததை தொடர்ந்து புள்ளிகள் பட்டியலில் 12 புள்ளிகளுடன் உள்ள தென் ஆப்பிரிக்க அணி 2-வது அணியாக அரை இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. ஏற்கெனவே இந்திய அணி 14 புள்ளிகளுடன் முதல் அணியாக அரை இறுதிக்குள் நுழைந்திருந்தது. இரு அணிகள் அரை இறுதிக்கு முன்னேறி உள்ளதை தொடர்ந்து மீதம் உள்ள இரு இடங்களை பிடிக்க கடும் போட்டி நிலவக்கூடிய சூழ்நிலை உருவாகி உள்ளது.

வரலாறு சினிமா

# 6 வருடங்களாக தமிழில் நடிக்காதது ஏன் ஸ்ரீதிவ்யா விளக்கம்



**சென்னை : நவ. 6,**

**தெலுங்கில் குழந்தை நட்சத்திரமாக பல படங்களில் நடித்தவர், ஸ்ரீதிவ்யா.**

பிறகு சிவகார்த்திகேயன் ஜோடியாக 'வருத்தப்படாத வாலிபர் சங்கம்' படத்தின் மூலம் தமிழில் அறிமுகமான அவர், தொடர்ந்து 'ஜீவா', 'வெள்ளக்கார துரை', 'காக்கி சட்டை', 'ஈட்டி', 'பெங்களூர் நாட்கள்', 'பென்சில்', 'மருது', 'ரெமோ', 'காஷ்மோரா' போன்ற படங்களில் நடித்தார். கடைசியாக 'சங்கிலி புங்கிலி கதவ தொற' படத்தில் நடித்தார். பிறகு அவருக்கு புதுப்பட வாய்ப்பு கிடைக்கவில்லை. இந்நிலையில், 6 ஆண்டுகள் கழித்து மீண்டும் தமிழுக்கு வந்துள்ள அவர், 'ரெய்டு' என்ற படத்தில் விக்ரம் பிரபு ஜோடியாக நடித்துள்ளார்.

இயக்குனர் முத்தையா தங்கை மகன் கார்த்தி இயக்க, கதிரவன் ஒளிப்பதிவு செய்துள்ளார். சாம் சி.எஸ் இசை அமைக்க, இயக்குனர் முத்தையா திரைக்கதை, வசனம் எழுதியுள்ளார். வரும் 10ம் தேதி திரைக்கு வரும் இப்படத்தின் புரமோஷன் நிகழ்ச்சியில் பங்கேற்ற ஸ்ரீதிவ்யா நிருபர்களிடம் கூறியதாவது: தமிழில் புதுப்பட வாய்ப்புகள் குறைந்ததற்காக காரணம் எனக்கு தெரியவில்லை. சில படங்களின் கதையும், கேரக்டரும் சரியில்லை என்று நான் நிராகரித்தேன். எனக்கேற்ற நல்ல படங்களும் அமையவில்லை. அதனால் இந்த இடைவெளி ஏற்பட்டிருக்கலாம். எனினும், மற்ற மொழிகளில் நடித்துக் கொண்டிருக்கிறேன்.

இதனால், தமிழில் எனக்கு ஏற்பட்ட இடைவெளியை நான் உணரவில்லை. 'வெள்ளக்கார துரை' படத்துக்குப் பிறகு மீண்டும் விக்ரம்பிரபுஜோடியாக 'ரெய்டு' படத்தில் நடித்துள்ளேன். சமீபகாலமாக எனது திருமணம் பற்றிய வதந்திகள் பரவி வருகிறது. நான் யாரையோ காதலிப்பதாகவும், அவரையே விரைவில் திருமணம் செய்துகொள்ள இருப்பதாகவும், அதை நானே சொன்னதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளது. இதில் சிறிதளவும் உண்மை இல்லை.

▶ **ரா... ரா... சரசுக்கு ரா... ரா...விமர்சனம் :** தமிழில் வெளியாகியுள்ள அடல்ட் கன்டென்ட் காமெடி படம் இது. மகளிர் விடுதிக்குள் வெவ்வேறு நோக்கங்களுடன் சிலர் நுழைகின்றனர். ஒருவர் கால்பாயாக, இன்னொருவர் காதலிக்கு நள்ளிரவில் பிறந்தநாள் வாழ்த்து சொல்ல, இன்னும் சிலர் ஒரு பெண்ணைக் கடத்த என்று நுழைகின்றனர். இதையடுத்து விடுதிக்குள் நடக்கும் கலாட்டாக்களை காமெடியுடன் சொல்லி இருக்கிறார், இயக்குனர் கேஷவ் தெபுர். முற்றிலும் புதியவர்கள் நடித்துள்ளனர். 4 ஹீரோயின்களுக்கும் கவர்ச்சி காட்டுவதை தவிர வேறு வேலை இல்லை. ஜாலியான கதை என்பதால், யாரும் கஷ்டப்பட்டு நடிக்க மெனக்கெடவில்லை. ஜி.கே.வியின் பின்னணி இசை சுமார் ரகம். ஆர்.ரமேஷின் ஒளிப்பதிவில் தொழில்நுட்ப தரம் குறைவு. டபுள் மீனிங் வசனங்களும், ஆபாசக் காட்சிகளும் குறைவு என்பது ஆறுதல். மகளிர் விடுதி என்றாலே அங்குள்ள பெண்கள் தண்ணியும் தம்மும் அடிப்பவர்கள், காமத்துக்கு அலைபவர்கள் என்ற தவறான சித்தரிப்பை தருகிறது படம்.

# மம்மூட்டி, ஜோதிகா படம் நவம்பர் 23ம் தேதி ரிலீஸ்



**சென்னை : நவ. 6,**

**மம்மூட்டி, ஜோதிகா நடித்துள்ள மலையாள படமான 'காதல் தி கோர்' திரைப்படம் வரும் நவம்பர் 23ம் தேதி தியேட்டர்களில் வெளியாக உள்ளது.**

கடந்த 2021ம் ஆண்டு வெளியான மலையாள படம் 'தி கிரேட் இந்தியன் கிச்சன்'. விமர்சன ரீதியாக வரவேற்பை பெற்ற இப்படத்தை இயக்குநர் ஜியோ பேபி இயக்கியிருந்தார். இந்தப் படத்தைத் தொடர்ந்து அவர் இயக்கியுள்ள புதிய படம் 'காதல் தி கோர்'. மம்மூட்டியுடன் ஜோதிகா இணைந்து நடித்துள்ள இப்படம் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

பல ஆண்டு இடைவெளிக்குப் பிறகு ஜோதிகா மீண்டும் மலையாளத்தில் நடிப்பது அவரது ரசிகர்களுக்கு மகிழ்ச்சியை கொடுத்திருக்கிறது. காதலை மையப்படுத்திய குடும்பப் படமாக உருவாகியுள்ள இப்படம் வரும் நவம்பர் 23-ம் தேதி தியேட்டர்களில் வெளியாகிறது. இதில் கணவன், மனைவியாக மம்மூட்டி, ஜோதிகா நடித்துள்ளனர். இந்த படத்தின் படப்பிடிப்பு முழுவதும் கேரளா மாநிலம், கொச்சியில் படமாக்கப்பட்டுள்ளது. மனித உணர்வுகளுக்கு மதிப்பு கொடுக்கும் வகையில் இதன் கதை உருவாக்கப்பட்டுள்ளது என இயக்குனர் ஜியோ பேபி கூறுகிறார்.

# போலி வீடியோ வெளியிட்ட நடிகை மீது வழக்கு



**மும்பை : நவ. 6,**

**போலி வீடியோ தயாரித்து வெளியிட்ட நடிகை உர்ஃபி ஜாவேத் மீது போலீசார் வழக்குபதிவு செய்துள்ளனர்.**

பாலிவுட் நடிகை உர்ஃபி ஜாவேத், பொது இடங்களில் ஆபாசமான ஆடைகளை அணிந்து வந்த விவகாரம் தொடர்பாக அவரை மும்பை போலீசார் கைது செய்ததாக நேற்று முன்தினம் சனிக்கிழமை பரபரப்பு தகவல் வெளியானது. அதுதொடர்பான வீடியோவும் சமூக வலைதளத்தில் வைரலானது. ஆனால் அந்த வீடியோ நடிகை போலியாக வெளியிட்டது என்பது தெரியவந்துள்ளது. அதையடுத்து போலி கைது வீடியோ தயாரித்து வெளியிட்ட உர்ஃபி மீது மும்பை காவல்துறை எப்ஐஆர் பதிவு செய்துள்ளது.

இதுகுறித்து போலீஸ் அதிகாரிகள் கூறுகையில், 'நடிகை உர்ஃபி ஜாவேத் மீது ஐபிசியின் 171, 149, 500, 34 ஆகிய நான்கு பிரிவுகளின் கீழ் வழக்குபதியப்பட்டுள்ளது. காவல் துறை ஊழியர்களின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் போலி கைது வீடியோ தயாரித்து வெளியிட்டுள்ளார். உர்ஃபியுடன் அவரது கூட்டாளிகள் மீதும் நான்கு பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்துள்ளது. இந்த வழக்கு தொடர்பாக விசாரணை நடைபெற்று வருகிறது. போலி போலீஸ் வேடத்தில் நடித்த பெண்களும் கைது செய்யப்படுவார்கள். மேலும், வீடியோவுக்கு பயன்படுத்திய போலி போலீஸ் வாகனமும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது' என்றனர்.

# வதந்தியாக மாறிய வாழ்த்து மிருணாள் தாக்குர் விளக்கம்



**ஹைதராபாத் : நவ. 6,**

**இந்தி நடிகையான மிருணாள் தாக்குர், 'சீதா ராமம்' படம் ஹிட்டானதை அடுத்து தென்னிந்தியாவிலும் புகழ்பெற்றுள்ளார்.**

அவர் இப்போது தெலுங்கில் சில படங்களில் நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார். அவர் நானி ஜோடியாக நடித்துள்ள 'ஹாய் நானா' டிச.7ம் தேதி வெளியாக இருக்கிறது. விஜய் தேவரகொண்டா நடிப்பில் 'ஃபேமிலி ஸ்டார்' என்ற படத்திலும் நடித்து வருகிறார். ஏ.ஆர். முருகதாஸ் இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடிக்கும் படத்தில் மிருணாள் நாயகியாக நடிக்க இருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில் சமீபத்தில் நடந்த விருது விழா ஒன்றில் 'சீதாராமம்' படத்துக்காக சிறந்த நடிகைக்கான விருதை மிருணாள் தாக்குர் பெற்றார். விருதை வழங்கிய தயாரிப்பாளர் அல்லு அரவிந்த் பேசும்போது, "மிருணாள், தெலுங்கு மணமகனைப் பார்த்து விரைவில் திருமணம் செய்துகொண்டு, ஹைதராபாத்தில் செட்டில் ஆக வேண்டும்" என்று வாழ்த்தினார்.

இதையடுத்து மிருணாள், தெலுங்கு நடிகர் ஒருவரை காதலித்து வருவதாகவும் அவரை திருமணம் செய்து கொள்ள இருப்பதாகவும் செய்திகள் பரவின. இந்நிலையில் இதை மறுத்து மிருணாள் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில், "என் நண்பர்கள், குடும்பத்தினர் உட்பட நெருங்கியவர்கள் இதுபற்றி என்னிடம் கேட்டு வருகின்றனர். நான் எந்த தெலுங்கு பையனையும் காதலிக்கவில்லை. திருமணமும் செய்துகொள்ளவில்லை. அந்த விழாவில், அல்லு அரவிந்த் சார் ஜாலிக்காக அப்படி பேசி, வாழ்த்தினார். அது இவ்வளவு தூரம் வதந்தியாக மாறும் என்று நினைக்கவில்லை" என்று விளக்கம் அளித்துள்ளார்




# உலக கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா புதிய சாதனை

# தீபாவளி பண்டிகை: நூல் விலை ஏற்றத்தை கண்டித்து உற்பத்தியாளர்கள் போராட்டம்





# ஜாதிப் பெயர்களை நீங்க கார்த்திக் சிதம்பரம் புதிய கோரிக்கை


| சென்னை / புதுக்கோட்டை | 06.11.2023 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை
வரலாறு
நாளிதழ்

06.11.2023 திங்கள்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

டி. ஆர். மகாலிங்கம் , புல்லாங்குழல் கலைஞர் (பி.1926) (இ.1986)



யஷ்வந்த் சின்கா , இந்திய அரசியல்வாதி (பி.1937)



சூலமங்கலம் ராஜலட்சுமி , கருநாடக இசைப் பாடகி, திரைப்படப் பின்னனிப் பாடகி (பி.1940) (இ.1992)



நிமலன் சௌந்தரநாயகம் , இலங்கை அரசியல்வாதி (பி.1950) (இ.2000)




## இன்றைய நினைவு நாள்

ஜார்ஜ் கார்டன் மீடு , அமெரிக்கப் பொறியியலாளர், அமெரிக்கத் தரைப்படை அதிகாரி (பி.1815) (இ.1872)



சஞ்சீவ் குமார் , இந்திய நடிகர் (பி.1938) (இ.1985)



போர் மற்றும் ஆயுத மோதலில் சுற்றுச்சூழலை சுரண்டுவதைத் தடுப்பதற்கான பன்னாட்டு நாள்